# பாதை மாறிய போது..

காரை செ. சுந்தரம்பிள்ளை



# பாதை மாறியபோது

குறுங்காவியம்

இன்றைய ஈழத்து இளைஞனின் கதை

காரை. செ. சுந்தரம்பிள்ளை

வரதர் வெளியீடு

ஆக்கம்: காரை. செ. சுந்தரம்பிள்ளை
முதற்பதிவு: மே, 1986
வெளியீடு: வரதர் வெளியீடு, யாழ்ப்பாணம்.
விலை ரூபா 8-00

இந்நூலின் பிரதிகளை தொகையாகப்பெறுவதற்கு:

1. ஆனந்தா புத்தகசாலை,
   226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
   தொலைபேசி: 22348

2. பூபாலசிங்கம் புத்தகசாலை,
   பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.
   தொலைபேசி: 23631

தருமன் - ஏழைக்கடல் தொழிலாளியின் மகன். மகனைக் கடல் தொழிலுக்கு அனுப்பாமல், படிப்பித்து பெரிய உத்தியோகத்தனாக்க வேண்டுமென்று தந்தை கனவு கண்டான்.

ஆனால் புயலின் போது கடலுக்கே இரையானான்.

கற்பி - தருமனின் தாய், மிகுந்த கஷ்டத்தினூடேயும் மகனைப் படிப்பித்தாள்.

தருமனும் நன்றாகப் படித்து 'ஏ.எல்' பரீட் நல்ல சித்தி பெற்றான்.

ஆனாலும் அரசின் 'தரப்படுத்தல்' றைக் குப் பலியானான்.

வெளிநாடு சென்று பொருள்தேட முயன் றான்.

வடிவேலன் என்ற 'ஏஜன்ற்' பணத்தை வாங்கிக் கொண்டு அவனை ஏமாற்றி விட் டான்.

ஒரு பெரியவரின் உதவியால் முத்தையன் கட்டில் விவசாயம் செய்யப் போனான், வெங்காயமும் மிளகாயும் நன்றாக விளைந் தன.

ஆனால் அங்கேயும் அரசின் புதிய இறக்கு மதிக் கொள்கையால் வெங்காயம் மிளகாய் விலை வீழ்ச்சியடைய, பெரு நட்டத்துக்குள்ளாகுன்.

அங்கே காவல் படையினரின் கெடுபிடியாலும் அவன் மனமுடைந்து வீடு திரும்ப —

அதே சமயம் ஏமாற்றுக்கார ஏஜன்ற் வடிவேலனை யாரோ கொலை செய்து விடுகிறார்கள்.

இந்தக் கொலைக்காகத் தருமனையும் சந்தேகித்த காவல் படையினர் தருமனின் வீட்டுக்கு வந்து அவனைத் தேடி விட்டுப் போகிறார்கள்.

தருமன் வீட்டுக்குவர, அவன் தாய் இதை அவனிடம் சொல்லி எங்கேயாவது தப்பி ஓடிவிடும்படி சொல்கிறாள்.

வேதனையும் ஆத்திரமும் இதயத்தில் குமுற, 'இந்த அநியாயங்களுக்கு ஒருமுடிவு காண்பேன' என்று சபதமிட்டு போராளிகளின் பாசறை நோக்கி தருமன் புறப்படுகிறான் .........
ஒரு போராளி உருவாகிறான்.

காரை சுந்தரம்பிள்ளை இந்தச் சம்பவங்களைத் தமது இனியகவிதைகளிலே படம் போட்டுக் காட்டுகிறார் இந்த நூலில்.

# 1. பழனி

காரை நகரின் கடற்கரை தன்னிலே
 கட்டி வைத்த குடிசையி னில் ஒரு
கூரை தட்டிப் பிறந்த குழந்தையைக்
 கொஞ்சி இன்பம் அடைந்த பழனிதன்
பேரை ஊரறி யச்செய வைத்திடும்
 பிள்ளை யாக இவன் வளர் வானென
யாரைக் கண்ட பொழுது முரைத்ததில்
 ஆனந் தம்பல கொண்டே மகிழ்ந்தனன்

வாடி கற்பி இவன் எனைப் போலொரு
 வள்ளம் தள்ளிப் பிழைத் திட லாகுமா
கூடி நின்று கடற்கரை மண்ணிலே
 குஸ்தி போடும் எம் சாதிப் பொடியள் போல்
கேடு கெட்டுத் திரிய விடுவனோ
 கிளிஞ்ச சேட்டுக் களிசானும் போட்டெங்கள்
வாடி வீட்டில் கருவாடு காய்ந்திட
 வைக்கும் வேலைக்கு வைப்பனோ சொல்லடி

சின்னத் தம்பி முதலாளி வீட்டிலே
 சேரன் 'என்ற பொடியன் படிக்கிறான்
என்ன மாதிரி இங்கிலிஸ் பேசுறான்
 இவனை யும் அந்த மாதிரி நாளொரு
பொன்னம் பெரிய படிச்ச மனிசனாய்ப்
 பெருமை பெற்றிடச் செய்திட வேண்டுமே
என்று நாளும் பழனி மனைவிக்கு
 இவனைப் பற்றியே பேசி மகிழுவான்

கற்பி பாவம் படிப்பறி வற்றவள்
 கடலில் மீனைப் பிடிப்பதும் விற்பதும்
குற்ற மற்ற தொழிலெனக் கொண்டவள்
 குழந்தை யைக்கல்வி மானாக ஆக்கிட
ஒற்றைக் காலிலே நிற்கும் பழனியின்
 ஓர்மத்தை மட்டும் கண்டு வியந்தனள்
மற்ற எந்த உலகும் அறிந்திடாள்
 மானம் மட்டுமே செல்வமாய் கொண்டவள்

பார தக்கதை யாவு மறிந்தவன்
 பழனி யாகையால் பெற்ற குழந்தைக்கும்
ஊர றிந்திடத் தருமன் எனப் பெயர்
 உவந்து சூட்டினன் நாட்கள் நகர்ந்தன
ஈர மண்ணில் கடற் கரை தன்னிலே
 இங்கு மங்கு மாய்ஓடி மகிழ்ந்திடத்
தூரத் தே கண்ட தந்தை பயங் கொண்டே
 தூக்கி வந்தனன் கற்பியை ஏசுவான்

பள்ளி செல்லும் பருவம் அடைந்திடப்
 பழனி பக்கத்து ஊரில் இருந்தவோர்
நல்ல உபாத்தியார் நாகலிங் கத்திடம்
 நாடிச் சென்றுதன் ஆசையைக் கூறினன்
கல்வி யென்பது யாவர்க்கும் சொந்தமாம்
 கற்க வைப்பதெம் தூய பணிஎனச்
சொல்லித் தருமனைப் பள்ளியில் சேர்த்துமே
 தொடர்ந்து கற்றிட ஊக்க மளித்தனர்

ஆண்டும் ஐந்துமோ சென்று நகர்ந்தன
 அரசி னர் புல மைப்பரீட் சைதனில்
வேண்டும் புள்ளிகள் பெற்றத னல்இவன்
 மேலும் கற்றட வாய்ப்பினைப் பெற்றனன்
நீண்டும் துன்பங்கள் வந்த பொழுதிலும்
 சிறிது மேதள ராமனம் கொண்டு தான்
நீண்ட லட்சியந் தன்னை அடைந்திடப்
 புத்த கத்துடன் ஐக்கிய மாகினன்

காலை நேரம் எழுந்திவன் பள்ளிக்குக்
கால்நடைதனில் செல்வதன் முன்னதாய்ச்
சால வும்பழங் கஞ்சிக்குப் பால் விட்டுத்
தாய்கொ டுத்திட வாங்கிக் குடிப்பதும்
மாலை நேரம் தன் வீட்டுக்கு வந்து பின்
மத்தி யான உணவினை உண்பதும்
நூலைக் கையில் எடுத்துப் படிப்பதும்
நுட்ப மாகவே சிந்தனை செய்வதும்,

நீல மேனிச் சமுத்திர மாதினை
நீண்ட நேரமாய்ப் பார்த்து மகிழ்வதும்
ஆழ மான கடலலை மீதிலே
அணிவ குத்துமே சென்றிடும் ஓடத்தின்
கோல மிக்க அழகை ரசிப்பதும்
கொக்கு நாரை குருவி பறப்பதும்
தாளம் பூத்தரும் வாசனை தன்னுடன்
சவுக்கி ருந்தெழும் காற்றொலி யாவையும்

பார்த்துப் பார்த்து மகிழும் தருமனோ
பாடம் கற்பதி லுஞ் சமர்த் தாகினன்
பூர்த்தி யானது பத்தாம் வகுப்பதில்
புள்ளி கள்பல பெற்றுச் சிறந்தனன்
நேர்த்தி வைத்தனள் கற்பி பழனியோ
நிறைவு செய்திடக் காவடி தூக்கினன்
கீர்த்தி மிக்கவ னாக மகன்வரக்
கேட்டனர் வரம் நாளும் தொழுதனர்

## 2. தருமன்

தந்தையின் ஆசை உணர்ந்தவன்-ஒரு
தாழ்விலா உள்ளம் படைத்தவன்-அவர்
சிந்தையை நன்கு தெரிந்தவன்-கல்விச்
செல்வத்தைத் தேட முயல்பவன்-மிக
நொந்து பகலிர வாகவே பல
நோய்நொடி யாவும் பொறுத்துமே-பெற்ற
மைந்தனைக் கற்க வழிசெயும்-பெற்றோர்
மாண்பினை எண்ணி மகிழுவான்

நாகலிங்க மென்ற உபாத்தியார்-இவன்
நாட்ட மறிந்தவ ராகையால் - மிக
வேகமாய் நல்ல கல் லூரியில்-இடம்
வேண்டியே பெற்றுக் கொடுத்தனர்-பல
ஆகம வேதம் படித்தவர் - இந்த
ஆகாத சாதிப் பொடியினை-உயர்
நாகலிங் கத்தார் நயப்பதா-என
நையாண்டி செய்து நகைத்தனர்

ஆற்றலும் ஆர்வமும் மிக்கவன் - நல்ல
ஆளுமை யும் மிகப் பெற்றவன் - பிறர்
போற்றும் குணங்க ளுடையவன் - வஞ்சப்
பொய்ம்மையும் நெஞ்சி லிலாதவன்-திறம்
தாற்றினை ஒத்த ஓர் மாணவன்-இதனை
நல்ல இடத்தில் நாட்டினால்-தென்றல்
காற்றினைப் போலச் சுகஞ் செய்வான்-எனக்
கற்ற நல் உபாத்தியார் கூறினார்

கூடப் படித்திட்ட மாணவர் - இவன்
கொள்கைகள் கண்டு வி யந்தினர்-தூய
ஆடகப் பொன்னடா நீயென்று-மிக
ஆனந்த மாக அணைத்தனர்-எந்தப்
பாடம் படித்திடு போதிலும்-அதைப்
பக்குவ மாக உணர்ந்திடும்-திறன்
கூடவே பெற்ற தருமனே-குணக்
குன்றாக நின்று திகழ்ந்தனன்

## 3 விதி

காரைநகர்க் கடற்கரையில்
கட்டுமரக் கூட்டம்
கம்பீர மாய் நின்று
புறப்பட்ட போது
நாரைகவு தாரிகடற்
காகம்ஒலி கூட்டும்
நண்டுடனே ஊரிசிறு
வண்டுஅணி சேர்க்கும்

வடகரையில் முத்து மணல்
வருவோரைக் கவரும்
வளர்சவுக்க மரமினிய
வாழ்த்துரைகள் கூறும்
கடல் அலைகள் கொஞ்சுமிளந்
தாளமணம் வீசும்
காய்த்தகுலை யோடஞ்சு
காற்றில்நட மாடும்

குளிர் நிழலை ஈகின்ற
தென்னை மர வட்டில்
குலை குலையாய்க் காய்கள் வரு
வோரை வரவேற்கும்
இளநீரை உண்கின்ற
அணில் தாளம் போட
இனிதான வரி வண்டு
ராகங்கள் பாடும்

பாக்கிழுவான் நண்டந்தப்
பரப்பெல்லாம் தவழும்
பாளி ஒன்றுட் சென்று மறு
பாளி வழி தோன்றும்
காக்கை கரு வாட்டு மணம்
ஈர்க்கவந்து சேரும்
கம்பு கொண்ட மங்கையரைக்
கண்டவுடன் ஓடும்

காடை பல சோடி அடை
காக்கும் இரைதேடும்
கண்ணி வைத்துப் பிடிப்போரைக்
கண்டு கதி கலங்கும்
பேடையினைக் பெரும் சேவல்
ஆவலொடு கூடும்
பெரும் பருந்து வட்டமிடப்
பேரிரைச்சல் போடும்

கட்டு மரம் ஏறி வலை
வீசி யுழைக் கின் ற
கடமை தவ ருத இளம்
பழனி வலை யோடு
வெட்டி வைத்த பாக் கொடு வெற்
றிலை யாவும் எடுத்தே
விறு விறெனக் கடல் செல்ல
ஆயத்த மாஞன்

படலை வரை வரும் சுற்பி
பறி யொன்றைத் தூக்கிப்
பழனி யிடம் கொடுத்து வழி
அனுப்புகிற வேளை
சடசடென ஒரு பல்லி
சங் கீதம் பாடும்
சனியன் என்று சபித்தபடி
கற்பி யுரைக் கின்ருள்

பல்லி சொல்லு தப்பா நீ
பார்த்துத்தான் போவன்
பக்க மெலாம் இருளு திடி
மின்னல் வரக் கூடும்
எல்லொரும் போகினமோ
என்பதையும் கேளும்
ஈழத்துச் சிதம்பரனை
இதயத்தில் சேரும்

உனக் கென்ன பயித்தியமா
உது பசியில் கத்தும்
உவ்வாறு பார்ப்ப தெனில்
எவ்வேலை நடக்கும்
எனக்கு நிற்க நேரமில்லை
எடுத்து வா சவளை
என்று சொல்லிப் பழனி பறி
யோடு நடந் திட் டான்

கட்டு மரம் தனைத் தாங்கிக்
காளையவன் சென்றான்
கற்பி கடற் கரை மீது
கவலை யொடு நின்றாள்
எட்டு மட்டும் பார்த்தபடி
இவள் சோரு கின்றாள்
இதயமே கனக்க இரு
விழி சிந்து கின்றாள்

கரு மேகம் வானத்தில்
ஒருமித்துச் சேரக்
கடகடென இடிமுழங்க
மின்னல் ஒளி காட்ட
பறவை ஒலி செய்ய"மிரு
கங்கள் பயந் தோட
பாழிகளில் நண்டுகளும்
பதுங்கி யிடம் தேடும்

பேரிரைச்ச லோடுபுயற்
காற் றொன் று வீசும்
பெரிய கடல் போல அலை
கரை வந்து மோதும்
சூரியனின் குஞ்சு பல
சுழன் றோடல் போலத்
தூய மணல் மீது ரா
வணன்மீசை ஓடும்

படபடென மரங்கள் சில
தான் முறிந்து வீழும்
பழ மோலைக் கூரைகளைக்
காற்றள்ளிப் போகும்
கடலலைகள் ருத்திரனைத்
தாண்டவமே யாடும்
கற்பி மட்டும் கடற்கரையில்
சிலையாக நின்றாள்

பேரலையில் அடிபட்டுத்
தோணி மூழ்க லாச்சு
பெரிய சூரு பழனியுடல்
தனை இழுக்க லாச்சு
புருஷனன்றி வேறு ஒரு
தெய்வமறி யாத
பெண்ணவளும் கடற் கரையில்
பேதலித்து நின்ருள்

## 4. மதி

மாத மொன்று மறைந்து விட்டது
உற்ருர் வந்து அழுத போயினர்
உலகம் கவிழ்ந்துதன் தலையில் விழுந்ததாய்
கற்பி கவலையே வடிவ மதாக
முற்றத திருந்தாள் மூத்தவர் சிலபேர்
நடந்ததை எண்ணிக் கவலைப் படாதே
நடப்பதை எண்ணு நாணில மீது

பிறந்தார் இறப்பது புதுமையே யல்ல
பூப்பன எல்லாம் காய்ப்பதே இல்லை
காய்ப்பன எல்லாம் கனிவதே இல்லை
பூத்துக் காய்த்து கனிந்தவை கூட
ஈற்றில் மறையும் இதுவேஇயற்கை

பழனி நல்லவன் பண்புமஉடையவன்
அழகும் இளமையும் ஆண்மையும் கொண்டவன்
பழனி இனியவன் பலநாள் வாழ்ந்து
ஊருக் குழைக்க உறுதி பூண்டவன்
ஆயினும் அவனை ஆண்டவன் அழைத்தான்
அழைப்பை மறுக்க அவன் யாரம்மா
பணமும் பதவியும் பவுசும் பெற்ருேர்
ஆளணி யோ டதி காரம் வாய்த்தோர்
காலம் வந்து காலன் அழைத்தால்
செலா தென்பரா இதுவே வாழ்வு
ஆதலால் தாயே அமைதிநீ கொள்க

காதலோ டுந்தன் கண்மணி மகனை
ஆளாய் ஆக்கிடு அதுவே பழனியின்
ஆத்மா சாந்தி யுறு வழி யாகும்
என்றே கூறி எழுந்து சென்றனர்
தருமனும் கற்பியும் தனித்தே விட்டனர்
ஒருவரு மில்லை ஒரு பொரு ளில்லை
இருளிலே வாழ்வு இருந்த போதும்
உறுதியை அவர்கள் இழக்கவே யில்லை

தம்பி தருமா தந்தையோ உன்னை
கற்றுவ ளுக்கிடக் கனவுகள் கண்டவர்
அவரது லட்சியம் அணுவள வேனும்
பிசகாது காத்தல் பேதையென் கடமை
இச்சக மீது எதுவந்த போதும்

பிச்சை யெடுப்பினும் பீடைகள் அடையினும்
நிச்சயம் அப்பு நினைத்த படியே
படித்திட வைப்பேன் பயமது கொள்ளேல்
படைத்தவன் படியா அளந்திட மட்டான்
என்றே கற்பி இளைஞனை ஊக்கிப்
படித்திட வைத்தனள்
பாவம் அவளே!

கடற்கரை செல்வதும் கட்டு மரங்கள்
கரைக்கு வந்ததும் கண்ணிய மாக
மீன்களை வாங்கித் தானவை சுமந்து
சந்தையில் விற்றும் சந்தியில் விற்றும்
ஊருக் குள்ளே நடையாய் நடந்து
வாடிக்கை யாளர் வாசலில் விற்றும்
வாழ்வினை யோட்டி வந்தனள் கற்பி

நேர்மை நிதானம் பே ராசை யின்மை
இவை அணியாக இவள் கொண்ட தாலே
வாடிக்கை யாளர் வழக்கமாய்க் கற்பியை
நாடினர் மீன்வகை நயமாய்ப் பெற்றனர்

தருமனும் தந்தை போல் நற்குண சாலி
வருவாய்க் கேற்ப வாழத் தெரிந்த
புத்தி சாலி பொறுமையும் உடையவன்
தாய்படு கின்ற தாங்கொணுத் துயரம்
சேயு மறிவான்; செல்வனும் அதனுல்
தானும் உதவிகள் தாய்க்குச் செய்யில்
தம்பி படியடா என்றவள் தடுப்பாள்
எனினும் தருமன் இசைவதே யில்லை

கல்லூரி விட்டதும் கடற்கரை செல்வதும்
தோணியில் ஏறித் துணிவுடன் கடலில்
தூண்டிலைப் போட்டு வேண்டிய மட்டும்
மீன்பிடிக் கின்ற வித்தையும் கற்ருன்
சிறுவலை படுக்கவும் களங்கண்டி பாய்ச்சவும்
கரையினில் கூடுகள் கட்டிமீன் பிடிக்கவும்
தருமன் அறிந்தான் தாயும் மகிழ்ந்தாள்

நல்ல உபாத்தியார் நாகலிங் கத்தார்
சொல்லும் செயலும் ஒன்றென வாழ்ந்த
கற்ற பெரியார் கண்கண்ட தெய்வம்
முற்று முணர்ந்த முனிவரைப் போன்ருர்
சாதியிற் பெரியார் எனப்பலர் சாற்றினும்
ஏதடா சாதி எவனடா தாழ்ந்தோன்
நல்லவன் உயர்ந்தோன் தீயவன் தாழ்ந்தோன்
அல்லவை செய்வோன் ஆகாத சாதி
பொல்லாத புரிவோன் புன்குல மாவான்

என்றெலாம் கூறும் இறைவனின் வடிவம்
அன்புடன் அவரும் அடிக்கடி தருமனைப்
படியடா தம்பி பயப்பட வேண்டாம்
முடிந்திடு மட்டும் முயன்றிடு தோல்வி
முயல்பவர்க் கில்லை மூதுரை அறிவாய்
இப்படிக் கூறி யிவன் மகிழ் வெய்த
ஊக்க மளிப்பார் ஒவ்வொரு நாளும்
ஆதலி ஞலே அவன் கல்வி மீது
காதலை கொண்டு கற்றிட லாஞன்

கற்பியோ கொண்ட கணவனின் ஆசை
முற்றிட வேண்டும் என்பத ஞலே
எத்தனை கஷ்டம் எதிர்ப்பட்ட போதும்
சித்தம் கலங்காச் சிந்தைய ளாகி
ஊக்கத் தோடு உரைத்திட லாஞள்
காசுக் கஷ்டம் கரைச்சல் கொடுக்கினும்
ஆசை யாலே அவளதைத் தாங்கிஞள்
பணத்தின் கஷ்டம் பாலன் அறிந்தால்
படிப்பைத் தொடரான் என்ப துணர்வாள்

எனவே இவளும் இயன்ற மட்டும்
மனதில் அதனை மறைத்துக் கொண்டாள்
கணவனின் பிரிவு காசுக் கஷ்டம்
எவை இவள் உளத்தை ஈட்டிபோற் குத்தினும்
அவை யெலாம் தாங்கி அன்புள மகனின்
படிப்பே லட்சியப் பாதையாய்க் கொண்டாள்

## 5. சதி

ஆண்டுகள் இரண்டுஞ் செல்ல
  ஆவலாய் எதிர் பார்த் திட்ட
வேண்டிய பரீட்சை நேர
  விருப்பி ஞேடிவனும் செய்தான்
கரண்டிய நாக லிங்கம்
  துயர்தர மறைந்த விட்டார்
அண்டவன் சூது என்று
  அதனையும் தாங்கிக் கொண்டான்

தெய்வத்தைக் கண்ட பேர்கள்
  தேசத்தில் யாரு மில்லை
பொய் சொல்லு கின்றேர் ஞானப்
  பொருளினைக் கண்டோ மென்பர்
ஐயமே யில்லை இந்த
  அவனியில் நாக லிங்கத்
தெய்வத்தை யன்றித் தர்மன்
  திருவினைக் கண்டதில்லை

சோதினை முடிவும் வந்து
    சேர்ந்தது தரும னுக்குத்
தீதிலா 'ஏ' 'பீ' இரண்டு
    'சீ' மூன்று என்ப தாச்சு
போதித்த உபாத்தி மாரும்
    புளுகினர் டாக்டராகி
மேதினி காப்பா னென்று
    மெச்சினர் மகிழ்ச்சி கொண்டான்

அரசாங்கம் மாற லாச்சு
    அதிகாரம் மாற லாச்சு
கரிசனை யற்ற பேர்கள்
    கல்வியைப் பற்றிப் பேசிப்
பிரச்சினை எழுப்ப லானார்
    பிரதேசம் தரப் படுத்தல்
உருப்படி யற்ற கொள்கை
    உருவாகத் தொடங்க லாச்சு

ஊக்க மாய்ப் படித்த பேர்கள்
    உயர் புள்ளி எடுத்த பேர்கள்
ஆக்கபூர் வத்தி னோடு
    அறிவினைப் பெற்ற நல்லோர்
தாக்கிடும் தரப் படுத்தல்
    தலையெடுத் திட்ட போது
நோக்கமே யின்றி நின்று
    நொந்தனர் இதயம் வெந்தார்

தருமனும் தரப் படுத்தல்
    தாக்கிய காரணத் தால்
பெரிய தோர் தோல்வி கண்டு
    பேதலித் துள்ளம் வெந்தான்
அரிய நல் மருத்து வத்துக்
    கவன் தரம் இல்லை யென்றார்
பிரதேச ரீதி யாகப்
    பேதையும் தள்ளப் பட்டான்

தந்தையை நினைத்தான் உள்ளம்
 தகித்தனன் அரசாங் கத்தை
நிந்தை செய் திட்டான் எந்த
 நீதியைக் கண்டே இந்த
விந்தை யாம் தரப் படுத்தல்
 விதித்தனர் என்னைப் போன்ற
மைந்தருக் கூறு செய்து
 மாபெரும் பாவம் கொண்டார்

கல்வியில் சம வாய்ப் பெய்தக்
 காட்டுதல் அரசாங் கத்தின்
நல்லதோர் கடமை யாகும்
 நாடெலாம் பள்ளிக் கூடம்
வல்ல விஞ் ஞான கூடம்
 வளமுள உபாத்தி மார்கள்
இல்லை யாம் என்று சொன்னால்
 இதற்கு யார் பொறுப்பாம் என்றான்

சீரிலாக் கல்விக் கொள்கை
 தேசத்தில் உள்ள தாலே
நேரிய வளர்ச்சி இல்லை
 நிலையுள்ள கல்வி இல்லை
கூரிய மதி படைத்த
 குழந்தைகள் கூட வீணாய்ப்
போரிடும் உளத்தோ ராகப்
 போகிறார் யாரை நோவோம்

ஆயிரம் துன்பம் வந்து
 ஆட்டிய போதும் தர்மன்
தாயின்சொற் படி பணிந்து
 தலையான முயற்சி யோடு
தூயநற் படிப்பை மீண்டும்
 தொடர்ந்தனன் பரீட்சை கண்டு
நேயமாய் முடிவை நோக்கி
 நின்றனன் நிகரி லாதான்

முடிபுதல் வனவாய் வந்து
    முடிந்திட்ட போதும் மீண்டும்
இடியெனத் தரப் படுத்தல்
    இவனது லட்சி யத்தைத்
தடுத்தது; உள்ளம் நொந்தான்
    தர்மமோ இஃது என்றான்
எடுத்தனன் சபதம் இந்தக்
    கொடுமையை எதிர்ப்பேன் என்றான்

## 6 நிராசை

பற்பல கற்பனைக் கோட்டைகள் கட்டியே
    படித்தவை வீணாகிப் போச்சு - ஒரு
குற்ற மிலாதவ ராயினும் வாழ்வு
    குலைந்து திசைமாற லாச்சு

ஊனை உருக்கி உழைத்துப் படிப்பித்த
    உத்தமப் பெற்றோர் தளர்ந்தார் - நிதம்
பேனையும் கொப்பியும் பென்சிலும் தூக்கிய
    பேதைகள் யாவும் இழந்தார்

'ஏ' யொடு 'பீ' பெற்ற ஏழைக் குழந்தைகள்
    ஈற்றினில் தோல்வியே கண்டார் - வெறும்
சீ'யும் பெறாது 'எஸ்' மட்டுமே பெற்றவர்
    தேர்வினில் வெற்றியே கொண்டார்.

ஆனந்தம் பொங்கிட வேண்டிய வாழ்வை
    அழித்த விதியினை நொந்தார் - இனி
ஏனிந்தச் சோதனை ஏற்பதா வேதனை
    என்றே இளைஞர்கள் வெந்தார்.

உள்ளம் விரக்தி அடைந்த நிலையினில்
    ஒற்றுமைப் பட்டிவர் நின்றார் - பெரு
வெள்ளம் திரண்டது போல எல்லோரும்
    வெளிப்பட்டு ஊர்வலஞ் சென்றார்.

கையிற் சுலோகங்கள் தாங்கிய மாதரும்
    காளையரும் அணி சேர்ந்தார் - இதை

வையமே கண்டிடாச் செய்கையீ தென்றுமே
வானளாவிக் கோஷம் செய்தார்

வீதி வழி சென்ற மாணவ ரைப் பலர்
வேதனை யோடுமே பார்த்தார் - சில
பாதி மனிதர்கள் ஏனிந்த கோஷம்இப்
பாழ் படு வார்க்கென வேர்த்தார்

வாழ்வதா சாவதா என்ற பிரச்சனை
வைத்திவர் போரிட லானார் - துயர்
ஆழ்வதா மீள்வதா என்ற நிலைக்குமே
ஐயகோ மாணவர் போனார்

பின் தங்கி வாழும் பிரதேச மாணவர்
பேணப் படுதல் நியாயம் - இதை
முன்வைத்து ஏனைய மாணவர் தங்களை
மூழ்க அடித்திடல் பாவம்

எந்தப் பிரதேச மாணவ ருக்குமே
ஏற்ற சலுகை செய்யட்டும் - ஆனால்
இந்த விதம் ஒரு விந்தை புரிதலை
இல்லாது வாழ விடட்டும்

என்றந்த மாணவர் முற்றவெ ளியில்
எடுத்தார் பெரிய சபதம் - அதைச்
சென்றுமே மந்திரி மாரிடம் சேர்த்துத்
திரும்பினர் சென்றது மாதம்

கூட்டம் பெரிதாய் நடந்தது செய்தியும்
கொட்டை எழுத்தில்வந் தாச்சு - பல
நாட்கள் நகர்ந்து வருடமு மாச்சுது
ஞாயமே இல்லாமல் போச்சு!

## 7. உழைப்பு

பாடுபட்ட கற்பி மகன் படிக்க வழி செய்தாள்
பாதியிலே தரப்படுத்தல் பழிவாங்க லாச்சு
கேடுற்ற விதியோவஞ் சகம் சூழ்ச்சி தானோ?
கேலிக்கே ஆளாகும் நிலைவந்த தையோ

தன் சாதித் தொழில் விட்டுப் படிப்பிக்கப் பார்
(த்தார்
தரித் திரங்கட் கேனிந்தத் தகாதபே ராசை
என்றிவளின் செவிகேட்கப் பலர்சொல்ல லானுர்
ஏழைமகள் ஏதுசெய்வாள் இதயமே வெந்
(நாள்

ஊர்க்குருவி பறந்தாலும் கொக்காவ தில்லை
உண்மை யிது என்றிவளின் உறவினரே
(சொன்னுர்
யார்க் கெடுத்து இதைச் சொல்லி ஆறுதலே
(பெறுவாள்
அன்பு மகன் தனை அணைத்துக் கண்ணீரே
(சொரிவாள்

''அம்மாநீ கவலையே அணுவளவும் கொள்ளேல்
அப்பு செய்த தொழில் செய்வேன் அதில்
(இழிவே இல்லை
சும்மாநீ வருந்தாதே; கற்றது வீண் இல்லை
சுகமாக வாழவைப்பேன் இதுசபதம்'' என்ருன்

''படித்தஉனைப் பறிதூக்க விடுவனே தம்பி
பார்த்தவர்கள் கேவலமாய் நினைப்பரடா தம்பி
முடியும்மட்டும் வேலைக்கு எழுதியே போடு
மூச்சுள்ள வரைக்கும் நான் உழைத்துன்னைக்
(காப்பேன்''

என்றந்தத் தாய்சொல்லத் தருமனுமே சொல்
(வான்
'எத்தொழிலும் தேசத்தில் இழிவான தில்லை
இன்றெந்தத் தொழிலுமே சிறப்பான தம்மா
இதுபற்றி மனம்நோதல் அறிவீனம் அம்மா'

என்றுமிக ஓர்மமொடு இவ்விளைஞன் எழுந்தான்
இரவுபக லாகமரக் கலமேறி யுழைத்தான்
அன்னை யுளம் மகிழ்ந்தாலும்; மகன்உத்தி யோ
(கம்
அரசாங்கத் தில்பார்க்க வில்லையென நொந்
(தாள்

## 8. ஏமாற்றம்

வருடம் ஒன்று பறந்துமே சென்றது
வள்ளம் கொண்டே இவனும் உழைத்தனன்
அருமை மைந்தனே ஆழ்கடல் செல்வதை
அன்னை யுள்ளமோ தாங்க மறுத்துமே
வருத்தம் கொண்டவ ளாக இருக் கையில்
வந்து சேர்ந்தனன் வடிவேலன் அன்னான்
உருவத்தில் மிகக் கட்டையன் ஆயினும்
உருட்டுப் புரட்டிலே ஈடிணை யற்றவன்.

அரபு தேசம்முத லான நாடுகள்
யாவும் சென்று திரும்பிய தாய் இவன்
பெருமை யாகவே பேசுவன்; மற்றவர்
பேச வேவிடான்; பேசத் தெரிந்தவன்
"தருமனைக் கல்வி கற்ற பொடியனைத்
தாய் நீ இப்படிக் கடலுக் கனுப்புதல்
தரும மா? இது நீதியா நீயும் ஓர்
தாயா?" என்றிவன் பீடிகை போட்டனன்

"என்ன செய்குவேன் தம்பி நாம் ஏழைகள்
எவர்தான் வந்து உதவி புரிகுவர்
சொன்னா லும் இவன் கேட்கவா போகிறான்
தோணி தள்ளிட வேண்டாம் நீ என்றிடில்
புன்சிரிப் புடன் பே ய்விடு வான்இந்தப்
பொடிய னைஒரு தொழிலிலே போட்டிட
அன்னை நான் பல கனவுதான் காண்கிறேன்
ஆகுமா?" பெரு மூச்சிவன் விட்டனன்

■

வடிவே லன்தூண்டில் போடத் தொடங்கினான்
வருத்தம் வேண்டாம் இவனுக்குஓர் தொழில்
எடுத்துத் தருவது எந்தன் கடமைநீ
இம்மி யேனும் துயர்கொள்ளேல் என்றனன்

பெடியனைக் கடல் செல்ல நீ விட்டது
பேதமை என மேலும் வருத்தினன்
கடிதம் ஒன்று தருகிறேன் தருமனைக்
கட்டாயம் வந்து காண நீ சொல்லென்ருன்

தருமன் வந்ததும் தாயும் உரைத்தனள்
தட்டா மல்வடி வேலுவை சந்தித்துப்
பெருமை மிக்க தொழில் ஒன்றைப் பெற்றிடு
பெரிய ஆள் அவன்; அத்துடன் நல்லவன்
கருணை கொண்டுமே வீட்டுக்கே வந்தனன்
கஷ்ட காலமே நீங்கிடும் என்றனள்
அருமை மைந்தன் அடுத்த நாட்டில் தொழில்
ஆற்று தல் சிறப் பென்று நினைத்தனள்

தருமனும்வடி வேலனைச் சந்தித்தான்
சர்க்க ரைகலந் தன்னவன் பேசினன்
அருமை யான மனிதன் தான் என்றுமே
அந்தப் பேதையும் எண்ணி மகிழ்ந்தனன்
வருட மொன்றுக்குள் லட்சம் உழைக்கலாம்
வசதி யாகவே வாழ்ந்து மகிழலாம்
தருக இருபதி னுயிரம் என்றுமே
தருமனை அந்த வஞ்சகன் கேட்டனன்

"அம்மா இருபதி னுயிரம் ரூபாய்க்கு
ஆரிடம் செல்லுவோம் நாங்கள் - நீ
சும்மா இரு கடல் உண்டு பிழைக்கலாம்
தொல்லை யிராத தனுலே"
என்றே தருமன் இதமா யுரைத்தவை
ஏறவில்லை யவள் காதில் - தம்பி
ஒன்றுக்கு மஞ்சிட வேண்டாமடா நான்
ஒழுங்குகள் செய்குவேன் என்ருள்
உள்ள நகைகளை விற்றுவிட்டாள் தன்
உடைமைகள் ஈடுமே வைத்தாள் - அந்தக்

கள்ளனிடம் தாரை வார்த்தாள் ஒருசிறு
கள்ள மிலாத வுளத்தாள்.

"ஐந்தாறு நாட்களுக் குள்ளாக உன்னை
அரபியா சென்றிட வைப்பேன் இனி
எந்தத் துயரமும் வேண்டாம் உனக்கெதிர்
காலம் ஒளிமய" மென்றான்

"சேரன் வெளிநாடு சென்றது மென்றால் அச்
செல்லப்பன் போனது என்றால் சிங்
காரன் வெளிநாடு போனது என்றால் என்
திறமை அறிகுவீர் அறிகுவீர் பின்னால்"

இவ்வாறு சொல்லிப் புறப்பட்டுப் போனவன்
இப்பக்க மேவர வில்லை - அவன்
ஒவ்வாத காரியஞ் செய்வதில் வல்லவன்
ஓர் சில கூறுவேன் இங்கே

## 9. வஞ்சகன்

ஆரம்ப காலத் திருந்தே - இவன்
ஆசை பிடித்த வெறியன் - பல
சோரத் தனங்கள் புரியும் - பெரும்
துட்டன் கருணை யிலாதான் - சொந்தக்
காரியம் செய்திட வேண்டில் - பிறர்
காலில் விழுந்தும் பணிவன் - எந்தக்
கூரிய புத்திய ரேனும் - இவன்
கூறில் மயங்கிடு வார்கள்

கொட்டிலி லேபிறந்திட்டான் வெறுங்
கூழைக் குடித்தே வளர்ந்தான் - ஒரு
கட்டில் கதிரை அறியான் - பணங்
காசு சிறிது மிலாதான் - ஒரு
ஒட்டுண்ணி போலவே வாழ்ந்தான் பிறர்
ஊதியம் தன்னில் வளர்ந்தான் - தமிழ்
மட்டும் சிறிதே அறிவான் - சில
மந்திரி மார்பெயர் சொல்வான்

நாலைந்து ஆங்கிலச் சொல்லை - சில
　　நாட்களில் பேச அறிந்தான் - பின்னர்
காலை மறைத்திட லோங்சும் - இரு
　　கைகள் வரைஒரு சேட்டும் - பெரும்
வேலை புரிபவன் போல - வெளி
　　வேசமே போட்டிட லானான் - சில
காலம் ஓர் எம்பியின் பின்னால் - சென்று
　　காலம் கழித்திட லானான்

மந்திரி யாரைத் தெரியும் - அவர்
　　மச்சானைக் கூட அறிவேன் - ராச
தந்திரி யாரை அறிவேன் - இவர்
　　சம்சாரம் பற்றியும் சொல்வேன் - என
எந்த இடத்திலும் கூறிப் - பிறர்
　　ஏமாற வைப்பதில் வல்லான் - இவன்
இந்த விதமாய்த் தொ டங்கி - இன்று
　　லட்சமாய்ச் சேர்த்துமே விட்டான்.

அந்நிய நாட்டினில் வேலை - பெற்று
　　ஆளாக்கு வேன்எனச் சொல்ல - பலர்
பொன்னைப் பொருளை இழந்தார் - இவன்
　　பெட்டி நிறைந்திட லாச்சு - முன்னர்
தன்னந் தனியனாய் நின்றான் - இப்போ
　　சம்சாரம் ஒன்றுமே கொண்டான் - அவள்
ஒன்றுங் குறைந்தவ ளில்லை - இந்த
　　உலுத்தனுக் கேற்ற ஒருத்தி

காணியை ஓர்சிலர் விற்றார் - போட்ட
　　காப்போடு சங்கிலி விற்றார் - சிலர்
பேணிய சொத்தை யிழந்தார் - சில
　　பெண்களும் தங்களை விற்றார் - பெருந்
தூணில் அமைந்தகல் வீடும் - அதன்
　　தோட்டமும் விற்றவ ருண்டு - இந்த
வீணனின் சொல்லில் மயங்கி - தொழில்
　　விட்டவ ரும்பல ருண்டு

மாடி வீடொன்றை அமைத்தான் - யாரோ
மந்திரி வந்து திறந்தார் இசை
பாடினர் ஆடினர்; உண்டார் - பெரும்
பணக்காரர் யாவரும் சேர்ந்து - நன்கு
கூடிக் குடித்து மகிழ்ந்தார் - மிகக்
கும்மாள மிட்டுக் குதித்தார் - இந்தக்
கேடியை வாழ்த்தி அகன்றார் - இவன்
கெக்கட்டம் போட்டுச் சிரித்தான்

காசு கொடுத்தவர் வந்தார் - தொழில்
காட்ட வில்லை எனில் தந்த - முழுக்
காசையும் தாவென நின்றார் போலிக்
காரணம் கூறி மறுத்தான் - அதால்
ஏசினர் ; ஓர்சிலர் நொந்தார் - இனி
எப்படி வாழ்வதாம் என்றார் - வாழக்
கூசிய ஓர்சிலர் அந்தோ - நஞ்சைக்
குடித்தே உலகைத் துறந்தார்.

ஓர்சில ஏழைகள் வந்தால் நாயை
ஓட்டி விரட்டி விடுவான் - தான்
நேர்மை உடையவ னென்றே - மிக
நெஞ்சை நிமிர்த்தியே சொல்வான் - பிறர்
சோர்வினைப் பற்றி அறியான் - அவர்
சொல்வ தையும் செவிக் கொள்ளான்-இந்தப்
பேர்வளி தன்னையே நம்பி - கற்பி
பேணிய சொத்தை இழந்தாள்

நஞ்சினை யொத்த கொடியன் - பல
நல்ல மனிதரை வீழ்த்தி - மிக
வஞ்சக மாகவே வாழும் - இவன்
வாழ்வும் ஒரு வாழ்க்கை யாமோ - தமிழ்
நெஞ்சமே இத்தகைப் பேரை - நீயும்
நீண்டகா லம்விடு வாயோ - எனக்
கெஞ்சி அழுபவர் கண்ணீர் - வீணில்
கெட்டிடப் போவதே இல்லை.

o

பத்துமா தங்கள் ஓடியே விட்டன
பாவியோ அந்தப் பக்கம் வரவில்லை
எத்த னைதரம் ஆள்விட்டுப் பார்த்தனர்
எத்த னேபல காரணங் கள்சொல்லிப்
பித்த லாட்டங்கள் ஆடி நடித்தனன்
பேதை கற்பியும் உள்ளம் வெதும்பினுள்
புத்தி பேதலித் திட்ட நிலையிலே
புறப்பட் டாள்அவன் வீட்டினை நோக்கியே

பட்ட ணத்தில் பணக்காரர் வாழ்ந்திடும்
பக்கு வம்மிக்க ஓரிடந் தன்னிலே
கட்டி வைத்த அவனது மாளிகை
கண்ட னள்; அட கள்ளன்எம் காசிலே
மட்டி லாத சுகத்தொடு வாழ்கிறுன்
மான மில்லையா இவனும் மனிசனு
பட்டி னிக்கேயாம் ஆளாகி மாழ்கிறேம்
பாவி யால்என உள்ளத்தால் வைதனள்.

வீட்டு வாசலைக் கற்பி யடைந்தனள்
வேலைக் காரன் தடுத்து நிறுத்தினுன்
ஆட்க ளைக்கொலை செய்திடும் அல்சேஷன்
அமர்க்க ளம்செய்ய; பெண்ணும் நடுங்கினள்
மாட்டி னையொத்த நாயை வளக்கிறுன்
மற்ற வர்பணந் தன்னிலே என்றிவள்
கேட்க எண்ணிஞள். ஆனல் விடுத்தனள்
கிஞ்சித் தும்பய மற்றவள் கூறுவாள்

வடிவேலு ஐயைப் பார்த்திட வேண்டும் நான்
வாங்கி ஞர்பணம் வட்டி விளையுது
பொடிய னும்வேலை யின்றித் திரியிறுன்
பேய்ச்சி என்றெனை ஊரார் சிரிக்கினம்
கடித மும்பல போட்டம் ஆள்விட்டுக்
கதைத்தும் பார்த்தோம் பலனென்று மில்லையே
அடதம்பி அந்த ஐயாவைக் கூப்பிடு
அச்சொட் டாய்ப்பதில் கேட்டுயான் சென்றிட''

ஊரி லேஜயா இல்லை அவர்வர
ஓரிரு மாதம் கூடவே செல்லலாம்
பாருங் கோபாவம் உங்க ளிடம்பெற்ற
பணத் தினைப்பிற ஏஜன்சிக் காரர்க்கு
நேரி லேகொடுத் தார்தொழில் சுவதாய்
நேற்றும் கூடக் கடிதங்கள் வந்ததாம்
சீரி லாத தொழிலிது மற்றவர்
சீற்றத் துக்கிட மாகவே வைத்திடும்''

என்றே ஊழியன் நன்ருய் நடித்தனன்
இந்த நேரத்தில் வந்தகார்ச் சாரதி
''கன்னை யாஎன்ன கதைகள் அளக்கிருய்
காரைப் போய்த்துடை ஐயா புறப்பட
இன்னும் ஐந்தாறு நிமிடங்கள் உள்ளன''
என்றனன்; இதைக் கற்பியும் கேட்டனள்
சின்ன நாயேநீ பொய்யா உரைத்தனை?'
சீறி ளுள்வடி வேலனும் வந்தனன்

''கற்பி வாஉனைப் பற்றித்தான் நேற்றைக்கும்
கதைத்த னுன்தொழில் கட்டாயம் கிட்டிடும்
சொற்ப ஆட்களைத் தானும் எடுக்கினம்
தொல்லை கள்பல இடையிலே வந்தால்
சொற்ப டியானும் செய்ய முடியலை
சொன்ன சொல் தவ ருதவன்யான்; பொருள்
விற்றுச் சுட்டுநீ காசுகள் தந்ததை
விளங்கி டாமலா யானும் இருக்கிறேன்.

காலமும் நேரமும் ஒத்துழைக் காவிடில்
காசிருந் தென்னசெல் வாக்கிருந் தென்னவாம்?
நாலு காசுமே இன்றி ஒருசிலர்
நாட்டை விட்டுப்பிற ஊருக்குச் சென்றனர்

ஏலு மட்டும் முயன்றவர் கள்பலர்
இன்னமு மிங்கேயே மட்டைய டிக்கினம்''
ஆல காலத்தை யொத்த அயோக்கியன்
அழகு டன்நடித் தான்;அவள் எண்ணுவாள்:

எடுத்தெ றிந்துயான் பேசிடு வேனெனில்
எண்ணி வந்தவை வீணகப் போய்விடும்
படித்தி ருக்குமென் மைந்தனின் வாழ்க்கையும்
பாழாகிப் போகலாம் இந்தக் கயவனுல்
கெடுதி கள்பல கூட விளையலாம்
கேவ லம்சிறு ஆசையி னுல்இதோ
படுகி றேன் இந்தப் பாடென எண்ணியே
பக்கு வத்துடன் சொல்லத் தொடங்கிருன்

o

அறிவு மிகப் பெற்றவரே ஐயாவே கேளும்
அனைதைகள் யாம் படிப்பறிவு சிறிதேனும் இல்
(லோம்
வறுமை யெனும் சொல்லுக்கே இலக்கணமாய்
(வாழும்
வாழவழி தெரியாத பேதைகள் யாம் ஐயா.
எனைமறந்த புருஷனும்ஓர் லட்சியத்தைக் கொ
(ண்டார்
என்னருமைப் பாலகனைக் கற்றிடவே வைத்தார்
துணையின்றி எம்மைவிட்டுச் சொல்லாமற் போ
(ஞர்
சோகமெனும் கடல்மூழ்கி மாழ்கின்ருேம் ஐயா
மேற்படிப்பைத் தொடர்வதற்கு விதிவிடவே
(யில்லை
வேலையொன்றைப் பெறுவதற்கு வழிபிறக்க
(வில்லை
காற்றில்அடி பட்டதுரும் பாகிநலிவுற்றுக்
கண்ணீரில் வாழ்கின்ருேம் கருணைசெய்யுமையா

தேற்றிஎமை வழிநடத்த யாருமற்ற போது
தேடிவந்தீர் நல்வார்த்தை கூறியே நின்றீர்
ஆற்றல்மிகப் பெற்றவரே அதனலே யானும்
ஆதரவாய் உமைநம்பிப் பணம்யாவும் தந்தேன்

கால்நடையாய் சென்றுமீன் விற்றபணம்;
(நாலும்
கருவாடாய்க் காய்ந்துழைத்துச் சேர்த்த பணம்
(நித்தம்
மேல்எல்லாம் வியர்வைசிந்தப் பெற்றபணம்;
(நாளும்
மிகுந்தபசி கிடந்துயான் காத்தபணம் துரையே

உதிரத்தைப் பிழிந்துழைத்துத் தந்தபண மையா
ஊரைஏய்த்துப் பிழைத்தறியா உத்தமியான்
(ஐயா
கதியற்ற எங்களுக்குக் கதியென்றே நம்பிக்

காசையெலாம் தந்தின்று கண்கலங்கு கின்றேன்
நகைநட்டை விற்றின்று ஒட்டாண்டி யானேன்
நல்லதொரு காணியையும் ஈடுவைத்து விட்டேன்
தொகையாக வட்டியுமே வளர்ந்துவிட்ட
(தென்றுள்
சொத்தெல்லாம் இழந்திங்கு பித்தாகி வந்தேன்

தந்தையைப்போல் மைந்தனையும் கடலுக்கே
(அனுப்பி
தாரைவார்த் துக்கொடுக்க மனமின்றி யானும்
இந்தவிதம் பாடுபட்டுக் காசீந்தேன் ஐயா
ஏமாற்றிப போடாதீர் இதுபெரிய பாவம்

எப்பாவம் செய்தாலும் அது தீரக் கூடும்
என்போன்ற ஏழைகளை ஏமாற்றிப் போட்டால்
அப்பாவம் தீரவே தீராது ஐயா
ஆதலினல் ஒருமுடிவு கூறுமென்று கேட்டாள்

கவலைமிகக் கொள்ளாதே கற்பி நீ செல்க
கட்டாயம் ஒருகிழமை குள்ளாக நானும்
அவனுக்கோர் தொழில் பெற்றுத் தருகிறேன்
(இன்றேல்
அன்று தந்த பணம் வட்டி யோடு தரு கின்றேன்

என்று வடிவேலன் சொல எழுந்தவளும் சென்
(ருள்
மனையுமே வெல்ல வல்ல தீயனிவன் நெஞ்சில்
நன்று நன்று இவளையினி வராதபடி செய்தல்
நமது கடன் என்று மிக யோசிக்க லானான்

## 11 - வஞ்சம்

மாதங்கள் இரண்டு சென்று
மறைந்தன என்ற போதும்
காதகன் அந்தப் பக்கம்
காலடி வைக்க வில்லை
பாதகன் தன்னைக் கண்டே
பணத்தினைக் கேட்ப மென்ற
வேதனை யுளத்தை வாட்ட
வெளிக்கிட்டான் தருமன் அன்றே.

அம்பல வாணர் என்னும்
அப்புக்காத் தவரின் மைந்தன்
சம்பந்தன், பண்பில் மிக்கோன்
தருமனின் இனிய நண்பன்
நம்பிக்கை மோசம் செய்த
நஞ்சனின் வீட்டைத் தேடிச்
செம்மலும் சேர்ந்து சென்றே
தீயனை வீட்டிற் கண்டார்

வீட்டிலே ஆடு மூஞ்சல்
மீதிலே அமர்ந்த வண்ணம்
பாட்டினை ரசித்துக் கொண்டும்
பழரசம் அருந்திக் கொண்டும்
மாட்டினை யொத்த வேலன்
மனைவியைத் தழுவிக் கொண்டும்
வாட்டமே எதுவு மின்றி
வடிவேலன் இருக்கக் கண்டார்

காரென்ன லொறிகள் என்ன
கடையென்ன கண்ணி யென்ன
சீரென்ன சிறப்பு மென்ன
செல்வத்தின் மாட்சி யென்ன

பேரென்ன புகழுமென்ன
பெரியகல் வீடுமென்ன
யாரென்னை அசைப்பார் என்னும்
ஆணவ வடிவம் கண்டார்

'தருமனே வா வா என்ன
சங்கதி; இந்தப் பக்கம்
ஒருநாளும் வரவே யில்லை
ஊரிலே புதின மென்ன
அருகிலே நிற்கும் பையன்
யாருடை புதல்வன்' என்றே
உரிமையாய் வேலன் கேட்டான்
ஒன்றுமே அறியான் போல

''காசினைக் கொடுத்தே இப்போ
கனகால மாச்சு தையா
ஆசையை வளர்த்தே எம்மை
அழித்திட்டீர்; அம்மா பெற்ற
பாசத்தால் என்னை நல்ல
பதவியில் வைக்க எண்ணி
மோசமே போனேன் தந்த
முதலைத்தா''- தருமன் கேட்டான்

''கள்ளனாய் நீயும் என்னைக்
கருதுறாய் போலும் அந்த
உள்ளமோ எனக்கும் இல்லை
உங்களின் பணத்தை யானும்
கொள்ளையா அடிக்கப் போறன்
கொஞ்சமும் அச்சம் வேண்டாம்''
கள்ளரை வென்ற கள்ளன்
கலங்காமல் பதிவி றுத்தான்

''புதுக்கதை யளக்க வேண்டாம்
பொறுமைக்கும் எல்லை யுண்டு
மதித்து நாம் இதுவ ரைக்கும்
மௌனமாய் இருந்து விட்டோம்

கதியற்ற எங்கள் காசைக்
கட்டாயம் தாரு'' மென்முன்
விதியிடம் மாட்டுப் பட்டு
விலகிட முடியாத் தர்மன்.

"முடியாது போடா உன்னல்
முடியுமேல் வாங்கு பார்ப்பம்''-
இடியெனச் சிரித்தான் வேலன்
எரியெனச் சினந்தான் தர்மன்
தடியொடு ஒருவன் வந்தான்
சம்பந்தன் தடுத்து வைத்தான்
கடிதென இருவ ரும்அக்
கயவனை நீங்கிச் சென்முர்

ஆத்திரத் தோடு தர்மன்
அன்னையைத் தேடி வந்தான்
சாத்திய படலை வீழ்ந்து
தரையிலே கிடக்கக் கண்டான்
நேர்த்தியாய் இருந்த வீட்டின்
நிலமெல்லாம் தாறு மாருய்ப்
பாத்திரம் தட்டு முட்டுப்
பொருட்களும் தெரியக் கண்டான்

வீட்டினை விட்டுத் தர்மன்
வெளியிலே வந்த போது
ரேட்டிலே நின்ற ஜீப்பின்
உட்புற மிருந்த ஓர் ஆள்
காட்டிடப் பொலிஸார் வந்து
கைவிலங் கதனைப் பூட்டிக்
கூட்டியே சென்ருர் ஏன் இக்
கொடுமை என் றறியான் தர்மன்

கடலுக்குச் செல்வ தாகக்
கதையினை அளந்து கொண்டே
கடத்தலா செய்கின் ருய் நீ
கயவனே என்று கூறி

அடித்தனர்; உதைத்தார் மேலும்
ஆக்கினை பலவும் செய்தார்
விடுத்திலர் மூர்ச்சித் தன்னான்
வீழ்ந்திடு மட்டும் அந்தோ!

கற்பியும் அறிந்தாள் கத்திக்
கதறினாள் ஐயோ என்றே
முற்றத்தே வீழ்ந் துருண்டாள்
முறையிதோ தெய்வமே ஓர்
குற்றமே யற்ற எந்தன்
குழந்தைக்கிக் கதியா என்றான்
அற்பர்கள் செயலுக் கெல்லாம்
ஆண்டவன் துணையா என்றாள்

கதியற்ற பேர்கள் விட்ட
கண்ணீரைக் கடவுள் பார்த்து
விதியென்று சொல்ல மாட்டான்
விளையாட்டாய் எண்ண மாட்டான்
மதியற்ற மாந்தர் செய்யும்
மனிதாபி மான மற்ற
சதிகளை அறிவான் பின்னர்
தக்கதோர் பரிசு மீவான்

## 12. அந்த இரவு

பூதல மெங்கும் பொற்கதிர் வீசிய
ஆதவன் மேற்கில் ஆழ்கடல் வீழ்ந்தான்
அழுக் காறு கொண்டவன் உளத்தினை யொத்த
காரிருள் உலகைக் கௌவிக் கொண்டது
வானத் தோரிரு மீனினம் மட்டும்
ஈன வுலகை எட்டிப் பார்த்தன
கோவளக் கரையில், கும்மிருட்டதனில்
காவல் தெய்வத்தை யொத்த கலங்கரை
விளக்கம் அடிக்கடி விட்டுவிட் டெரிந்தது
வழக்கம் போல வைரவர் கோயில்

வாசலில் தெரியும் மங்கா விளக்கும்
விளக்கு மாகத் தெரியவே யில்லை
மின்மினிப் பூச்சிகள் ஒருசில இருண்ட
தென்னஞ் சோலையைச் சுற்றித் திரிந்தன

மலையென எழுந்தே அலைக்கரங் கொண்டு
கலகம் செய்த கரிய நிறத்து
ஆழக் கடலும் அமைதியாய்க் கரையுடன்
தோழமை யோடு துயிலத் தொடங்க
சவுக்கு மரங்களைத் தழுவிடும் காற்ருல்
எழுந்திடு ஓசையும் இல்லா தொழிந்தது
வாடைக் காற்றும் வாட்டிய பனியும்
தென்னைகள் கண்ணீர் சிந்த வைத்தன
தாளம் பூவைத் தழுவிய காற்றின்
நறுமணத் துடனே நன்றியில் லாத
வடிவே லன்மனம் போல் நாற்ற மெடுத்த
உப்பங் கழிகளில் ஊறிய காற்றும்
அவ்வப் போது கைகலந் திட்டன

கள்வரை யொத்த கடுவன் நண்டுகள்
வெள்ளை மணலில் விளையாடி நின்றன
வான மிடிந்து தரைமேல் விழுந்தால்
தாமென்ன செய்வது என்பதைப் போல
அடைக்கலங் குருவிகள் அண்ணுந்த படியே
படுத்துத் துயின்றன; பறவை களான
கொக்கொடு கோட்டான் குருவிகள் உள்ளான்
திக்கெலாம் வாட்டிய பனியில் நடுங்கிக்
குஞ்சினைப் பேடும் பேட்டினைச் சேவலும்
அஞ்சிறை கொண்டே அணைத்துத் துயின்றன
எங்கும் மயான அமைதி சூழ்ந்தது
தங்கும் மீனவக் குடிசைகள் எல்லாம்
உறக்கத்தில் ஆழ்ந்தது ஊரே துயின்றது
ஆயினும் ஒருயிர் அந்த இரவிலும்
சேயினை நினைத்துச் சித்தம் கலங்கிப்
புலம்பிய வண்ணம் புழுதியில் கிடந்தது

# 13. அம்பலவாணர்

சூரியன் காலை எழுந்தனன் - சுடர்
சுற்றுமுற் றெங்கும் பரப்பினன் - தங்கள்
காரியந் தன்னைப் புரிந்திட மக்கள்
கண்கள் விழித்தே எழுந்தனர் - நல்ல
நேரிய வாழ்வினை வாழ்ந்தவள் - தீமை
நெஞ்சில் இலாத சிறப்பினள் - பெரும்
பாரிய துன்பம் வருத்திட - கற்பி
பஞ்சு படாப்பாடு பட்டனள்

காவல் நிலைய மடைந்தனள் - மகன்
கள்வனே அல்லன் சற் புத்திரன் - ஒரு
கேவல மான செயல் செயும் - உளம்
கிஞ்சித்தும் இல்லாச் சிறப்பினன் - அந்தப்
பாவி வடிவேலன் தீயவன் - வெறும்
பச்சைப்பொய் சொல்வதில் வல்லவன் - அவன்
நாவினிக் கச்சொன்ன வார்த்தையை நாங்கள்
நம்பி முழுமோசம் போயினேம்.

கொடுத்த பணத்தினைக் கேட்டதால் - பாவி
கோபங்கொண் டிந்நிலைக் காக்கினான்-அவன்
அடுத்துக் கெடுத்திட்டான் ஐயகோ - எங்கள்
அருமந்த செல்வத்தைத் தாருங்கோ - என்று
விடுத்த அவள் வேண்டு கோளெலாம் - அங்கே
விளலுக் கிறைத்த நீ ராயின - ஏழை
எடுத்தெடுத் துண்மை உரைக்கினும் - அவை
ஏறுமா அம்பலம், இல்லையே!

அங்கேயோர் காவல் அதிகாரி - இந்த
அப்பாவிப் பெண்ணை அழைத்துமே - அடி
எங்கேயும் போய்ப்பயன் இல்லையாம் - இது
எக்கச் சக்கமான குற்றமாம் -பல
திங்கள் கொடிய சிறையிலே - இவன்
சிக்கித் தவித்திடப் போகின்றான் - என
மங்கையைப் பார்த்தே உரைத்தனன் - அவள்
மார்க்கமே இல்லையா என்றனள்

மார்ச்க மிலாது மிருக்குமா - பணம்
மட்டும் இருந்தால் முடிந்திடும் - எல்லாம்
சேர்த் தொரு மூவாயி ரம் தரில் - மிகத்
தெண்டித்துக் காரியம் வெல்லலாம் - இதை
யார்க்கும் சொல் லாதின்று மாலேயே - தந்தால்
யான் இவ் வுதவியைச் செய்குவேன் - என்று
தீர்க்கமாய் அந்த அதிகாரி - சொல்லச்
சேயிழை முயற்சிப்பேன் என்றனள்

O

எரியில் அகப்பட்ட என்பிலாப் புழுவாய்
கற்பி கடுந்துய ரடைந்த வண்ணம்
அப்புக்காத் தம்பல வாணரை அடைந்து
அன்பும் அறனும் ஆற்றலும் பெற்ற
என்னரும் துரையே ஏழையைக் காப்பீர்
குற்றமே யறியாக் குழந்தையைக் காப்பீர்
நஞ்சர்கள் செய்யும் வஞ்சகச் செயலால்
துஞ்சிடும் எம்மைத் துரையே காப்பீர்
என்றெலாம் கண்ணீர் சிந்திய வண்ணம்
கற்பி அவரின் காலில் வீழ்ந்தாள்

அம்பல வாணர் அவள்துய ருணர்ந்து
காவல் நிலேயம் கடிதினில் சென்று
உண்மையை விளக்க உயரதி காரி
நன்றெனக் கூறி நல்கினர் விடுதலே

விடுதலே யாகி வெளியே வந்த
தருமனே அம்பல வாணர் நோக்கி
மகனே! நீயும் மனமது வருந்தேல்
அன்றைய மக்கள் அறத்தோடு நின்றனர்
இன்றோ யாவும் தலேகீ ழாயின
ஆதலால் இதுவரை நடந்தன யாவும்
தியதோர் கனவாய்ச் சிந்தையில் கொண்டு
ஆயநல் முயற்சிக்கு ஆயத்த மாவாய்

முத்லைதயன் கட்டில் முப்பது ஏக்கர்
காணியென் பேரில் கனகால மாக
உள்ளது அதனை உவப்புடன் செய்ய
முன்வரு வாயேல் முன்னுக்கு வரலாம்

எந்தன் மகனும் இதுவரை காலம்
எந்தத் தொழிலும் இயற்று துள்ளான்
அவனும் நீயும் ஐக்கிய மாக
காணியைப் பேணிக் காய்கறித் தோட்டம்
செய்து வாழ்க செகமிசை என்றார்

கற்பியும் அதனைக் களிப்புடன் ஏற்றாள்
சொந்த ஊர்தனில் சுதந்திர மாக
வாழலா மென்றால் வழியே இல்லை
ஆதலால் மகனே ஐயா சொற்படி
கமஞ்செய்வ தேநற் காரிய மென்றாள்.
தருமனும் அதுவே தகுமெனக் கொண்டு
கமஞ்செய முத்லைதயன் கட்டுக் கேகினன்

## 14. முத்தையன் கட்டு

காடுகள் வெட்டி எரிய விட்டார் - அடிக்
கட்டைகள் நன்கு கிளறிவிட்டார்
கூடியே நாற்புறம் வேலியிட்டார் - சிறு
கொட்டி லமைத்துக் குடியிருந் தார்
மேடுகள் தட்டிச் சமப்படுத்தி நிலம்
மீதினில் பாத்திகள் தாமமைத்தார்
தேடியே நல்லவிதை விதைத்தார் - பயிர்
செய்து பயன்பெறத் தாமுழைத் தார்

முத்தையன் கட்டெனும் அவ்வூரில் பலர்
முண்டி யடித்து நிலம்வாங்கி
மெத்தவும்தோட்ட மமைத்து நின்றார் – இந்த
மேதினி போற்றப் பயிர்வளர்த்தார்
கத்தரித் தோட்ட மமைத்தவரும் - நல்ல
காய்கறித்தோட்ட மமைத்தவரும்
செத்தல் மிளகாய் விளைத்தவரும் - எனச்
சேர்ந்து பலரும் உழைத்துநின்றார்

ஆர்வம் மிகுந்த இளைஞர்களும் - மிக
அக்கறை கொண்ட யுவதிகளும்
கூர்மை படைத்த மதியினரும் - நிலம்
கொத்திப் பயிர் செய்ய முன்வந்தார்
நேர்மை உழைப்புநற் பேருக்கம் - தங்கள்
நெஞ்சில் அசையாத நம்பிக்கை
சோர்விலா உள்ளம் இவற்றோடு - நல்ல
தோழமை பூண்டே தொழில்புரிந்தார்

ஆழக் கிணறுகள் தாம்அமைத்தார் - அதில்
ஆனநீர் எந்திரம் கொண்டிறைத்தார்
வாழை கமுகொடு தென்னை நட்டார் - புது
வாழ்வு மலர்ந்திடத் தாம் முயன்றார்
ஏழை எளியவர் எல்லாரும் - நில
மில்லா வழியற்ற மானிடரும்
நாளெல்லாம் நெற்றி வியர்வைசிந்தித்-தொழில்
நாட்ட முடனே உழைத்து நின்றார்

புத்தம் புதிய பொலிவுடனே - அந்தப்
பூமி விளையத் தொடங்கியது
நித்தம் புதியவர் வந்தார்கள் - அங்கே
நிம்மதி காணலாம் என்றார்கள்
செத்தல் மிளகாய் விளைந்திடவே - ஒரு
தெய்வீக மானமண் என்றார்கள்
முத்தையன் கட்டுப் புகழ்பெறவே - பலர்
முன்னின் றுழைத்திட லானார்கள்.

அம்பல வாணரின் கட்டளையை - மிக
அன்புடன் தர்மனும் தானேற்றே
சம்பந்த னோடிந்த ஊர்வந்தே - மிகத்
தக்க முயற்சியி லீடுபட்டான்
செம்மை யுடன்நிலம் பண்படுத்தி - நல்ல
செத்தல் மிளகாய் பயிரிடவே
மும்முரமாக முயன்று நின்றான் - இவன்
முத்தையன் கட்டில் புகழுமுற்றான்

வாசிக சாலை யமைப் பதற்குச் சில
வாலிப ரோடு முயன் றிவனும்
கர்சுகள் சேர்த்ததில் வெற்றி பெற்றான் – ஒரு
கட்டடம் கட்டித் திறந்து வைத்தான்
பாசமுடன் பெரி யோர்களெல்லாம் - இவன்
பண் பினை மெச்சிப் புகழ்ந் துரைத்தார்
தேசம் நலம் பெற வேண்டு மெனில் - இந்தச்
செம்மலைப் போல் வாழ வேண்டுமென்றார்

பாலகர்கள் கல்வி பயில்வதற்கு ஒரு
பாலர் வகுப்பைத் தொடக்கி வைத்தான்
மாலினி என்றவோர் ஆசிரியை -பிஞ்சு
மாணவர் தம்மைப் பயிற்றி நின்றாள்
ஏழைமை யாலே படித்தறியா - முதி
யோர்களைக் கற்பிக்க வேண்டு மென்றே
தோழ ரொடு மாலை நேரத்திலே - பாடம்
சொல்லிக் கொடுக்கஏற் பாடு செய்தான்

பெட்டி கடகம் இழைப்பதற்கும் –கூடை
பின்னி அவற்றினை விற்ப தற்கும்
இட்ட முடன் துணி நெய்வதற்கும் – அதை
ஏற்ற படி வெட்டித் தைப்பதற்கும்
திட்ட மிட்டுப்பெண்கள் வாழ்வதற்கும் - தங்கள்
தேசம் வளர உழைப் பதற்கும்
மட்டிலாக் கொள்கைகள் தான் வகுத்தே -அவை
மாண்புற ஏற்ற முயற்சி செய்தான்

முத்தையன் கட்டை விருத்தி செய்ய - இவன்
முன்னின் றுழைக்கத் தொடங்கியதும் - அங்கே
பத்துப் பதினைந் திளைஞர்களும் - தொண்டில்
பற்று மிகுசில கன்னியரும்
நித்தம் இவனிடம் வந்து செல்வர் - எழும்
நெஞ்சக் குமுறலைக் கொட்டி நிற்பர்
புத்துணர் வாங்கே உருவாச்சு – புதுப்
போக்கும் இவரிடை யுண்டாச்சு

வீசும் புதிய கருத்தலைகள் - வந்து
வெற்றி யளிக்கத் தொடங்கிடவே
காசு படைத்தவர் மக்களுக்கு - நல்ல
காரியம் செய்திட வேண்டு மென்றார்
பேசிப் பயனில்லைச் செய்கைகளே - எங்கள்
பீடையைப் போக்கும் கருவி என்றார்
மோசம் புரிபவர் யார் எனினும் - அவர்
முடிவுதங் கைகளில் என்றுரைத்தார்.

## 15 மாலினி

மாலினி என்னும் மலரினை யொத்த
கோல மயிலினள்; குரல்வள முடையவள்
ஆடல் பாடல் அனைத்து மறிந்தவள்
நாடகம் பற்றியும் நன்றாய் உணர்ந்தவள்
நகைச்சுவை யோடு நயமாய் யுரைக்கும்
தகைமை படைத்தவள்; தமிழின் மீது
ஆராக் காதல் ஆழமாய்க் கொண்டவள்
தீராத பக்திச் செல்வமும் பெற்றவள்
குழந்தைக ளோடு கொஞ்சி மகிழ்வதும்
அழகாய் அவர்க்கே அருங்கதை சொல்வதும்
ஆடிப் பாடிச் சிறார் மகிழ் வெய்தக்
கூடிக் களித்துக் குதுகல முறுவதும்
பொழுது போக்காகப் பூவையும் கொண்டாள்;
இளஞ்சிறு மலர்களாய் இவளிடம் வந்த
வஞ்சக மற்ற பிஞ்சுக் குழந்தைகள்
நெஞ்சம் மகிழ நீல விழியாள்
அன்புடன் நாளும் அவர்களை அணைத்து
எண்ணும் எழுத்தும் இனியநற் பாட்டும்
கனிவுடன் சொல்லிக் களித்திட வைப்பாள்.

சுறுசுறுப் போடு சுட்டித் தனமும்
நிறையப் பெற்ற நித்தில மொத்த
பாலகர்கள் குணமோ பற்பல தினிசு
காலை தொடக்கம் கண்ணீர் சிந்தி
அம்மா அம்மா அம்மா என்றே
கப்பா அழுதே தொல்லை கொடுக்கும்

குழந்தையு முண்டு; கொப்பிபுத் தகத்தைக்
கிழித்தே எறிந்து கெக்கட்டம் போட்டுச்
சிரித்து மகிழும் சிறுர்களும் உண்டு
கரிசனை யின்றிக் காற்சட்டை சேட்டைத்
தாறுமா றுகத் தம்மிஷ்டப் படியே
போட்டுவந் தங்கே புரளிகள் புரியும்
சுட்டிப் பயல்களும் தொல்லைகள் தருவர்
அக்கா இவனுக் கடிப்பேன் இவனே
மொக்கன் எந்தன் முகத்திலே சோக்கைப்
பூசியே விட்டான் என்றிடும் ஒன்று;
காசைக் காணேம்; மாபிளைக் காணேம்
பென்சிலைக் காணேம் பேனையைக் காணேம்
என்றெல்லாம் கத்தி இரைப்பவர் சிலபேர்

பசிக்குது அக்கா விடாய்க்குது அக்கா
வெளியே போக விடுங்கோ அக்கா
படிப்பும் வேண்டாம் பாட்டும் வேண்டாம்
தடிப்பும் வேண்டாம் நாட்டியம் வேண்டாம்
விளையாட மட்டும் விடுங்கோ அக்கா
என்றிடும் சிலது; இவர்களுட் சிலரோ
அன்பான அக்கா அழகான அக்கா
நன்ருக இருக்குது நகங்களின் பூச்சு

மருதாணி வீட்டில் வளருதோ அக்கா
அம்மா கூட அதுதான் பூசுவா
அப்பா பூசி விடுவது வழக்கம்
அக்கா உங்களுக் கார்தான் பூசுவர்
என்ருெரு குழந்தை இனிதாய்க் கேட்கும்
சாறியும் நல்லது சட்டையும் நல்லது
செருப்பும் கூடச் சிறப்பாய் இருக்குது
மூக்கு மின்னி முழிப்பாய் இருக்குது
காப்புகள் மோதிரம் இல்லையா அக்கா
காதிலே வளையம் கனக்குதா அக்கா
ஏதிது பொன்னு இப்பொழு தெல்லாம்
பவுண் நகை போடப் பயப்பிடு கினமாம்

அம்மா சொன்னவா உண்மையா அக்கா
இப்படி ஒன்று செப்பிடும்; இவர்களைக்
கட்டி மேய்த்துக் கவலைகள் போக்கி
அனுப்புவ தென்பது அதுபெருங் கஷ்டம்
எனினும் மாலினி இனிதாய்ப் பழகி
அன்புடன் குழந்தைகள் தம்மை அணைத்தே
எண்ணும் எழுத்தும் இனிதாய் பாட்டும்
கனிவுடன் சொல்லிக் களித்திட வைப்பாள்

தினையள வேனும் தீவினை அறியா
மனம்படைத் திட்ட மாலினி நல்லாள்
யாழ்ப்பா ணத்துப் பெண்கள் கல்லூரி
ஒன்றிலே படித்து உயர்தர வகுப்பில்
தரப்படுத்த லாலே தாழ்ந்து போன
பரிதாபத் துக்குரிய பாவை யாவாள்;

தந்தையோ ஏழை விவசாயி; வாழ்வில்
மந்த மாருதம் வீசவே யில்லை
பிள்ளைகள் கற்ருல் பெரும்பயன் பெறலாம்
உள்ளம் உவக்கலாம்; ஊரும் புகழும்
என்றெல்லாம் எண்ணி ஏமாந்து போன
விந்தை மனிதன்; விவசா யத்தால்
வாழ்வோ மென்ற நம்பிக்கை யோடு
முத்தையன் கட்டில் முயற்சி செய்பவர்

நாமார்க்கும் குடியலோம் என்னும் கொள்கை
படைத்தவள் மாலினி; பண்பும் மிக்கவள்
உழைத்த பணத்தில்; பருக்கை யற்ற
கூழே குடிக்கினும் அதுவே நிம்மதி
என்னும் இலட்சியம் இனிதாய்ப் பெற்றவள்
தந்தையின் ஏழ்மையும் தாயின் சோகமும்
வெந்துயர் தந்த வேளையின் போதும்
மனந்தள ராது மானமாய் வாழத்
தனைத்திடப் படுத்திய தகைமை படைத்தவள்
பட்டுபட் டுழைத்துப் பண்புடன் வாழக்

காய்கறித் தோட்டம் கண்போல் காத்தாள்
பெட்டி கடகம் பாயு மிழைத்தாள்
ஆடைகள் நெய்தாள்; அலங்காரம் செய்தாள்
சட்டைகள் தைத்தாள் பூவேலை செய்தாள்
ஆடு மாடுகள் கோழி வளர்த்தாள்
பாலும் தயிரும் நெய்யும் முட்டையும்
விற்ற பணத்தில் வீட்டைக் காத்தாள்
மற்றவ ரிடம்போய் வணங்கிவா ழாமல்
குற்றமே யின்றிக் கோதிழை வாழ்ந்தாள்

தருமனின் சமூகத் தொண்டுகள் கண்டு
பெரியதோர் விருப்பம் பெண்மணி யுற்றாள்
ஊருக் காக உழைக்கும் இவனைத்
தெய்வமாய் மதிக்கும் சிந்தை படைத்தவள்
வளர்ச்சி யுறாத வன்னிக்கு வந்தே
அளப்பருஞ் சேவை ஆற்றும் தருமனை
ஆண்டவன் வடிவாய் ஆயிழை நோக்கினள்
அன்னவன் விடை தந்த அரிய சிந்தனைகள்
கன்னியின் மனதைக் காந்தமாய் இழுத்ததால்
அவன்வழி சென்றே அவனுக் குதவுதல்
தேவ சேவை யாய்ச் சேயிழை நினைத்தாள்
ஆதலி னாலே அவனுண் டாக்கிய
தீதறு பாலர் வகுப்பிலே பாடம்
கற்பிக்க இவளும் களிப்புடன் வந்தாள்

மலரினும் மெல்லிய மாணவர் தம்மை
இலகுவாய் போதித் திதயம் கவர்ந்த
மாலினி குழந்தைகள் மனதிலே புகுந்து
தெய்வமாய் நின்று திருநடஞ் செய்தாள்
வையகம் போற்றும் உய்நெறி காட்டிய
மாலினி வாழ்க மாலினி வாழ்க!

## 16. முத்தையன் கட்டு விளைந்தது

முத்தையன் கட்டு விளைந்த தம்மா – இருள்
    மூடிய வாழ்வும் மலர்ந்ததம்மா
தத்திமித் தோமெனப் பாடியாடி – மக்கள்
    சந்தோசம் கொண்டு மகிழ்ந்தாரம்மா

கத்தரித் தோட்டம் அமைத்தவரும் பச்சைக்
காய் மிள காய்த் தோட்டம் வைத்தவரும்
செத்தல் மிளகாய் விளைத்தவரும் – மிகு
செல்வம் படைக்க முடிந்த தம்மா.

சந்தையில் செத்தல் மிளகாய் விலை – தூய
தங்கப் பவுணின் விலையாச்சு
சிந்திய கண்ணீர் மறைத்தாச்சு - புதுச்
சீரிய வாழ்வு மலர்ந்தாச்சு

வாடிய மக்கள் நிமிர்ந்தார்கள் - கடன்
வாங்கிய பேரும் உயர்ந்தார்கள்
தேடிய செல்வம் படைத்தார்கள் தங்கள்
தேவைகள் பெற்று மகிழ்ந்தார்கள்

தேடுவா ரற்ற நிலங்க ளெல்லாம் - இன்று
தேடிப் பயிர்செய் நிலமாச்சு
நாடுவா ரற்ற புதர்க ளெல்லாம் – நல்ல
நாற்று விளையு மிடமாச்சு.

வண்டிகள் வந்து குவிந்து நிற்கும் - மோட்டார்
வாகனம் வந்து நிறைந்து நிற்கும்
கண்டி காலி கொழும் புள்ள வரும் - இங்கே
காய்கறி வாங்கக் குவிந்து நிற்பர்

ஓலைக் குடிசையில் வாழ்ந்தவர்கள் – நல்ல
ஓட்டுவீடு கட்டிக் கொண்டார்கள்
கூலிக் கலைந்து திரிந்தவரும் - பணம்
கொஞ்சமேனும் சேர்த்துக் கொண்டார்கள்

காலால் நடந்து திரிந்தவர்கள் – மோட்டார்
கார்களும் வாங்கிட லானார்கள்
ஏலாது என்றே நலிந்தவரும் – இனி
எங்களுக்கு கென்னென் றுவந்தார்கள்.

தங்க நகைகளும் வந்தாச்சு - திறம்
தையல் இயந்திரம் கண்டாச்சு
பொங்கும் இசைதரும் வானொலியும் - நல்ல
பூட்டுத் திறப்பும் கிடைத்தாச்சு

சந்தைகள் சாவடி வந்தாச்சு - பல
சரக்குக் கடைகள் உருவாச்சு
செந்தமிழ் வாழ்வு மலர்ந்தாச்சு - அதால்
செருக்கும் ஒருசிலர்க் குண்டாச்சு
தருமன் கடனை அடைத்து விட்டான் - பெற்ற
தாயின் சுமையை இறக்கி விட்டான்
பெருமை மிகவும் படைத்து விட்டான் ஊரார்
பேசும் அளவுக் குயர்ந்து விட்டான்

## 17. திருவிழா

முத்தையன் கட்டு விழாக் கோலம் பூண்டது
சித்திரை மாதப் பௌர்ணமி யன்று
அம்மன் கோயிலில் அரிய திருவிழா
எம்மை யெல் லாம்இனி தாய்க் காக்கும்
தாயே உன்னைத் தாள்பணி கின்றோம்.
நீயே முதல்வி நீயே யாவும்
நீயே படைத்துக் காத்தழிக் கின்றாய்
நோய்நொடி தீர்ப்பாய் நோவின்றிப் பார்ப்பாய்
பேய்பிசா செல்லாம் போக்கி யடிப்பாய்
காடு மேடெல்லாம் காவலாய் நிற்பாய்
ஆடு மாடெல்லாம் அன்பாய்க் காப்பாய்
சத்தியம் தவறில் சங்காரம் செய்வாய்
நித்தம் துதிக்கில் நெஞ்சிலே நிறைவாய்
கல்வியும் தருவாய் வீரமும் தருவாய்
செல்வமும் தருவாய் சத்தியும் தருவாய்
நிம்மதி யோடு நிலத்திலே வாழ
அம்மையே உன்னை அடிபணி கின்றோம்
என்றெலாம் தாயின் இன்னருள் வேண்டிக்
குழந்தைகள் தொடக்கம் குடுகுடு கிழவர்
கிழவிகள் வரைக்கும் துதித்தே நிற்கும்
அம்மன் திருவிழா அழகிய பெருவிழா
எம்மை யாள் கின்ற ஈஸ்வரிக் கோர் விழா
வீதிகள் பெருக்கினர் பந்தல்க ளிட்டனர்
வாழைகள் கமுகுகள் தென்னைகள் நட்டனர்

மாலைகள் தோரணம் மணிகளும் கட்டினர்
பூரண கும்பமும் பூக்களும் வைத்தனர்
சிகரமும் வான்மிசை உயரவே கட்டினர்
தன்னிக ரற்றநல் மின்னொளி சேர்த்தனர்
வண்ண நிறத்தினில் விட்டுவிட் டொளிதரும்
பன்னரும் குமிழ்விளக் காலழ கூட்டினர்
ஒலிபரப் பிகளும் ஊரெலாங் கட்டினர்
பக்திப் பாட்டும் பல்சுவைப் பாட்டும்
கத்தும் பொப்பிசை கருநா டகவிசை
அத்தனை பாட்டும் ஆங்காங்கு கேட்டன.

எங்கும் விழாவினுல் இனிய குதூகலம்
மங்கையர் முல்லை மல்லிகை சூடினர்
தங்கச் சங்கிலி காப்பு மோதிரம்
தலையணி காதணி மூக்கணி என்பன
பலவித மாக அணிந்தழ கூட்டினர்
கோபுரம் போலக் கொண்டையும் கட்டினர்
கூந்தலை வாரிப் பின்னியும் விட்டனர்
அத்தர் பன்னீர் அழகாய்ப் பூசினர்
பட்டுப் புடைவைகள் நைலோன் சாரிகள்
கட்டிக் கொண்டு களித்து மகிழ்ந்தனர்.

ஆண்களும் சளைத்தவர் அல்லவாம் என்றிடப்
பூண்டனர் சங்கிலி கடிகாரம் மோதிரம்
வேட்டியும் சால்வையும் விதம் விதமான
சேட்டுகள் அணிந்தனர் சிகையினை வாரி
அழகுறச் செய்தே ஆங்கே நின்றனர்

நடிக மணியின் நாடகம் நடக்குதாம்
கடைசி யாக என்றதும் ஒருசிலர்
படுத்தபின் எழுந்து பார்ப்போ மென்று
படுக்கப் பாயொடு தலையணை கொண்டும்
அரிக்கன் லாம்பைக் கொளுத்திக் கொண்டும்
கோயிலை நோக்கிக் குறுகிட லானர்

கடலைக் காரிகள் கச்சான் காரிகள்
ஐஸ்பழம் விற்கும் சயிக்கிள் காரர்
முத்து மாலையும் கண்ணாடி வளையலும்
சீப்பும் காப்பும் சென்றும் விற்கும்
மணிக் கடைக் காரரும் மற்றுள பேர்களும்
எங்கும் நிறைந்து இனிதாய் நின்றனர்.

உழுந்து போடினும் உடனே விழாத
பெருந்திர ளான கூட்டம் நிறைந்தது.
கோயில்மே ளத்துடன் விழாஆரம் பித்தது
தட்சணா மூர்த்தியின் தவில்ஒலி பரப்பியில்
கச்சித மாக ஒலித்திட லானது
பிரபல கலைஞர் பஞ்சாபி கேசனின்
நாதஸ் வரத்தை நன்றாய்ச் சுவைத்தனர்
பத்ம நாதனும் பலரும் வியக்க
அற்புத மாய் இசை மாரிபொ ழிந்தபின்
சின்ன மணியின் வில்லிசை மாந்தித்
தம்மை மறந்து சிலைபோல் இருந்தனர்.

கண்களும் துயின்று கனவு காண்கிற
அந்தநே ரத்தில் அரங்கினில் மயான
காண்டம் என்னும் நாடகம் தன்னை
நடிக மணிக் குழு நடிக்கத் தொடங்கும்
வயிர முத்துவின் பாட்டும் நடிப்பும்
துயின்றவர் தம்மைத் துயிலெழ வைத்தன
'ஆரடீ கள்ளி' என்னும் பாட்டு
எஞ்சிய பேரையும் எழுந்திட வைத்தது

இத்தனை நிகழ்ச்சிகள் இனிதாய் நடக்கையில்
இவற்றைப் பற்றி எள்ளள வேனும்
கவலையி லாச்சில காளையர் கன்னியர்
தனிமையில் அமர்ந்து தங்க ளுடைய
எதிர் காலம் பற்றி ஏதோ பேசித்
திட்டங்கள் தீட்டிச் சிந்தையில் ஆழ்ந்தனர்
இரவு கழிந்திட இரவி எழுந்தனன்
இனியநற் பேரொளி எங்கும் பரந்தது

# 18. பேரிடி

முத்தையன் கட்டில் மீண்டும்
முயற்சிகள் தொடங்க லாச்சு
கத்தரி வெண்டை பாகல்
கறிமிள காய்வெங் காயம்
செத்தலாம் மிளகாய் தோடை
சிறுபய றுழுந்து போன்ற
அத்தனை பயிரும் வைத்தே
ஆர்வத்தோ டுழைக்க லானார்

நாற்றங்கால் அமைக்கின் றோரும்
நாற்றினைப் பிடுங்கு வோரும்
சேற்றினை உழுகின் றோரும்
திறம்பட நடுகின் றோரும்
ஏற்றமே இறைக் கின்றோரும்
இடையில் நீர் கட்டு வோரும்
மாற்றியே பயிர்செய் வோரும்
மருந்தினைத் தெளிக்கின்றோரும்

களைகளைப் பிடுங்கு வோரும்
காய்கறி பிடுங்கு வோரும்
கிளைகளை வெட்டு வோரும்
கிடங்குகள் வெட்டு வோரும்
வழிகளைத் திருத்து வோரும்
வாய்க்கால்கள் திருத்து வோரும்
தொழிலேதம் கண்ணாய்க் கொண்டு
தொடர்ந்தனர் சோர்வே யின்றி;

நீரினை இறைப்போர் ஓசை
நிலத்தினை உழுவோர் ஓசை
காரினை அறுப்போர் ஓசை
காளைகள் ஓட்டு மோசை
வாரியே பொருளை வாங்க
வருபவர் போவோர் ஓசை
சிரிய மகளிர் ஓசை
சேர்ந்தெங்கும் ஒலித்து நிற்கும்

கடவுளைப் பற்றிப் பேச்சு
காய்கறி பற்றிப் பேச்சு
உடைகளைப் பற்றிப் பேச்சு
உணவினைப் பற்றிப் பேச்சு
படைகளைப் பற்றிப் பேச்சு
பணத்தினைப் பற்றிப் பேச்சு
இடை யிடை ஈழப் பேச்சு
என்றெலாம் பேச லானார்

காய்கறி விளைந்து மக்கள்
கவனத்தை ஈர்த்த போது
ஓய்வின்றி உழைத்தோ ரெல்லாம்
உவகையே அடைந்த போது
பாய்ந்தது ஈட்டி யொன்று
பலநாளும் கஷ்டப் பட்டு
மாய்ந்தவர் மனதை வாட்டி
மகிழ்ச்சியைப் போக்கிற் றன்றே!

வெங்காயம் மிளகாய் மல்லி
வெந்தயம் உள்ளிப் பூடு
மங்கல மான மஞ்சள்
மற்றுள பொருட்க ளெல்லாம்
இங்கித மாய் இறக்கி
இலங்கையில் மலிவாய் விற்க
இங்குள அரசின் நோக்கம்
இருப்பது தெரியலாச்சு

மிளகாய் வெங் காயமெல்லாம்
மெத்தவும் விளைந்த நேரம்
மளமள வென்றே வேற்று
மண்ணிலே இருந்தி வற்றை
பழுதின்றி இறக்கி விற்கும்
பாதகம் நடந்த தாலே
தளர்ந்தனர் தோட்டக் காரர்
சர்வமும் இழந்தார் நொந்தார்

o

ஆசை ஆயிரம் நெஞ்சில் வளர்த்தவர்
அந்த மண்ணையே நம்பி யிருந்தவர்
காசைத் தண்ணீராய் வீசி யிறைத்தவர்
கண்விழித் துப்பயிர் கண்ணாய் வளர்த்தவர்
தேசப் பற்றோடு நாளுமு ழைத்தவர்
சிந்தும் வியர்வை யுதிரம் பிழிந்தவர்
நாச முற்றனர் கட்டுப்பா டின்றியே
நாளும் வந்த வெளியூர்ப் பொருட்களால்

கப்ப லில் மிள காயொடு வெங்காயம்
கட்டுப் பாடின்றி வந்து குவிந்தன
குப்பை குப்பையாய் எங்கும் நிறைந்தன
கொள்ப வர்மலி வாகவே பெற்றனர்
இப்ப டிப்பிற நாட்டுப் பொருள் பல
ஈழ நாட்டில் இடத்தைப் பிடித்திட
ஒப்பு டன்பயிர் செய்தவர் யாவரும்
உற்பத் திப்பொருட் சந்தை யிழந்தனர்

கட்டுக் கட்டாக வெங்காயம் கோடியில்
கவனிப் பாரற்று அழுகிட லானது
கொட்டி வைத்த நற் செத்தலும் நாட்படக்
கொஞ்சம் கொஞ்சமாய் மாந்திட லானது
இட்ட மான உழுந்து பருப்பொடு
இனிய பாசிப் பயறும் உளுத்தன
கட்டி வைத்த பொருகள் அனைத்தையும்
காசுக் காகக் குறைத்துமே விற்றனர்

தரகர் கூட்டம் இடையிற் புகுந்தது
தட்டிச் சென்றே வயிறு வளர்த்தது
திரும்ப வும்பயிர் செய்து பிழைப்பது
சிரம மென்பதை மக்கள் உணர்ந்தனர்
வரவை மிஞ்சிக் கடனும் வளர்ந்தது
வட்டி யோகறை யான்போல் அரித்தது
பரவ லாக வறுமை பிடித்தது
பஞ்சப் பாட்டெங்கும் காதில் ஒலித்தது

தோட்டம் செய்த நிலத்தினை விட்டனர்
தொடர்ந்து செய்த பயிரையும் விட்டனர்
மாட்டை ஆட்டை வளர்ப்பதும் விட்டனர்
மண்ணை வெட்டும் தொழிலையும் விட்டனர்
காட்டை நம்பிக் குடிபெயர்ந் தோரெலாம்
கவலை யோடு தம் ஊர்க்குத் திரும்பினர்
போட்டியாய்ப் பொருள் வந்து குவிந்ததால்
போமிட மின்றி உள்ளம் வருந்தினர்.

வங்கி யிற் கடன் பெற்றவர் யாவரும்
வட்டி யோடு கடனை அடைப்பது
எங்ங னம் என வுள்ளம் வெதும்பினர்
ஈடு வைத்தவர் நெஞ்ச முடைந்தனர்
தங்கம் யாவும் அடைவாய் வைத்தவர்
தாங்கொ ணாத் துய ரோடு குமைந்தனர்
மங்கை யர் ரத்தக் கண்ணீர் சொரிந்தனர்
மற்று ளோர்களும் வாடி வதங்கினர்.

மோக னம் பாடி வந்தவர் மத்தியில்
முகாரி ராகம் எழுந்திட லானது
சோக மே உரு வாகிட இந்நிலை
தொடரு மா அன்றிச் சென்று மறையுமா?
தாக முற்றவன் தண்ணீர்க் கிரங்கல் போல்
தரையை நம்பியோர் முறையிட்ட போதிலும்
வேக மாக இறங்கத் தொடங்கிய
வெளியூர்ப் பண்டங்கள் வெற்றியேகொண்டன.

## 19. வன்னியில் பயங்கரம்

அந்நிய நாட்டுப் பொருட்களின் வருகை
வன்னிய மக்களின் வாயில் மண் போட்டது
இப்படித் துன்பம் இவர்படும் ஓர்தினம்
அவல நிகழ்ச்சி ஆங்கிடம் பெற்றது
காவல் படையினர் கவசவா கனங்களில்
வன்னிப் பகுதியில் வந்தே இறங்கினர்

முத்தையன் கட்டையும் முற்றுகையிட்டனர்
வீடு வீ டாகச் சல்லடை போட்டுத்
தேடுதல் புரிந்தனர்; சிக்கிய பேர்களை
ஏற்றிக் கொண்டு எங்கோ போயினர்
அகப்பட்ட பேரை அடித்தும் உதைத்தும்
ஆக்கினை செய்தும் அல்லற் படுத்தினர்.

காளையர் கன்னியர் யாவரும் ஓடிக்
காடுமே டெல்லாம் ஒளித்துக் கொண்டனர்
குழந்தைகள் குட்டிகள் கிழவியர் கிழவர்
தலைமறை வாகித் தப்பப் பார்த்தனர்
பயங்கர வாதிகள் இருப்பதாய்க் கூறிப்
படையினர் தேடும் கயமையைச் செய்தனர்
துப்பாக்கி வேட்டும் பீரங்கிச் சத்தமும்
அப்பக்க மெல்லாம் அதிர வைத்தன
இடைக்கிடை குண்டொலி எதிரொலித் திட்டது
வாகனச் சத்தமும் வானைப் பிளந்தது
காலையில் வந்த காக்கி உடையினர்
மாலையில் வன்னியை விட்டு மறைந்தனர்.

ஓடி ஒழித்தவர் ஒருவாறு தெளிந்து
வீட்டினை நோக்கி விரைந்திட லாயினர்
அதே தின மிரவு ஐந்தாறு வாகனம்
வன்னிக்கு மீண்டும் வந்து சேர்ந்தன
சீருடை யின்றித் துப்பாக்கி சகிதமாய்க்
குண்டர்கள் பலபேர் வந்து குவிந்தனர்
கொள்ளை யடித்தும் கொலைகள் புரிந்தும்
தள்ளரும் துயரம் தந்துமே சென்றனர்
அடுத்தநாட் காலை அந்த வூரோ
சோபை யிழந்து சோக மயமாய்
சுடுகாடாகத் தோன்றிய தம்மா!

இடைக்கிடை வீடுகள் எரிந்து கிடந்தன
ஆங்கும் ஈங்கும் பிணங்கள் சரிந்தன
கண்ணீர் விட்டுக் கதறிய அவ்வூர்
பட்ட வேதனை பகருதற் கரிதே.

மறுநாள் வந்த தினசரி யொன்றில்
பின்வரும் செய்திகள் பிரசுர மாயின
கண்ணி வெடிக்கு ராணுவம் மாண்டது
வன்னியில் பயங்கர வாதிகள் மாண்டனர்
இருபகு திக்கும் இருமணி யுத்தம்
இறுதியில் பயங்கர வாதிகள் ஓடினர்

பிறிதொரு செய்தித் தாளோ பின்வரும்
தகவல்கள் தன்னைத் தாங்கி வந்தது
வன்னியில் பயங்கரம்! பலர்குடி பெயர்ந்தனர்
எழுபது வயதுக் கிழவரும் உட்படப்
பெண்கள் குழந்தைகள் இளைஞர்க ளோடு
இறந்தவர் தொகையோ இருபதோ முப்பதாம்
இன்னும் பலபேர் படுகாய முற்றனர்
காசும் நகையும் களவாடப் பட்டன
கன்னியர் ஒருசிலர் கற்பும் இழந்தனர்
பயங்கர வாதிகள் பலர்கை தாகினர்
தப்பியோட முயன்றவர் சிலரோ
துப்பாக்கி வேட்டுக் கிரையாகி விட்டனர்

எங்கள் குழந்தைகள் எதுவுமே யறியார்
இவர்களை ஏன்தான் கைதுசெய் தனரோ
அவர்களை உடனே விடுதலை செய்க
என்றதாய் மாரின் உருக்க மான
வேண்டுகோள் ஓர்புறம் முக்கியம் பெற்றது
இன்னோர் தினசரி இப்படிச் செய்தியை
கொட்டை யெழுத்தில்முன் பக்கத்தில் தந்தது
பட்டப் பகலில் பயங்கரக் கொள்ளை!
கட்டிய தாலி சங்கிலி காப்பு
ஒட்டியா ணம்தோ டென்பன போச்சு
பயங்கர வாதிகள் வன்னியில் நடத்திய
துணிகரச் செய்கை; அப்பாவி மக்களும்
துப்பாக்கிக் குண்டுக் கிரையாகி விட்டனர்
ஒன்று பத்தாய் பத்து நூறாய்
வதந்திகள் கூடப் பறந்து சென்றன

அன்றைய நிகழ்ச்சிகள் அவ்வூர் மக்களை
அச்சமும் பீதியும் அடைய வைத்ததால்
உடலும் உள்ளமும் ஒருங்கே சோர்ந்து
நடைப் பிணமாகி நாளையும் இச்செயல்
தொடர்ந்திட் லாமெனத் துயருற லானார்

## 20. விரக்தி

கவலையும் துன்பமும் கௌவிப் பிடிக்க
அவல முற்ற அவ்வூர் தனிலே
நம்பிக்கை யிழக்க; நற்குல சீலன்
ஊக்கம் மிக்கோன் உயர்ந்த கொள்கைத்
தருமன் என்பான் தன்தரும் நண்பன்
சம்பந்த னோடு தரையி லமர்ந்து
உரையாட லானான்; உற்ற நண்பா
கரையிலாத் துன்பம் கடலென வரினும்
மனமது தளரா மாட்சிமை வேண்டும்
உழைத்துப் பிழைக்கும் உள்ளம் படைத்த
எவரையும் துன்பம் எட்டுவ தில்லை
கவலையை விடுத்துக் கடமையைச் செய்வோம்
முயற்சி யின்மையும் மூத்த சோம்பலும்
பயனிலாச் செயல்கள்;
பகவத் கீதையும்
கடமையைச் செய்யெனக் கட்டாயப் படுத்தும்
கடமை உணர்வும் காசினி இயல்பும்
திடமுள நெஞ்சமும் சேரப் பெற்றால்
இன்ப துன்பங்கள் இரண்டும் சமமே
நன்மையும் தீமையும் நட்டமும் லாபமும்
வரவும் செலவும் வையகத் தியல்பே
ஆதலால் நண்பா அடுத்த முறையும்
காதலாய்ப் பயிர்கள் கட்டிக் காப்போம்
அத்துடன் வேறு அருமந்த தொழிலும்
புத்தியாய்ச் செய்து பிழைத்திடல் வேண்டும்
தருமன் எவ்விதச் சலனமு மின்றி
அருமை நண்பனுக் கழகாய் யுரைத்தான்

அமைதியாய்ச் சம்பந்தன் அனைத்தும் கேட்டே
குமையும் உள்ளக் குமுறலைக் கொட்டுவான்
இயற்கையின் செய்யலால் இப்படி நடந்தால்
முயற்சி செய்யலாம் முன்னேற்ற மடையலாம்
ஆனால் இதுவோ யாரோ சிலரின்
திட்ட மிட்ட சிறுசெய லாகும்
நட்ட மடையும் நம்மைப் பற்றி
இதுவரை யெவரும் இரங்கிய தில்லை
புதுப்புதுப் பொருள்கள் பொலிவாய் மலிவாய்ச்
சந்தையில் கிடைத்தால் சகலர்க்கும் மகிழ்ச்சி
இந்தப் பொருட்கள் எப்படி வருகுது
இதனால் நட்டம் யாருக் குண்டு
என்பதைப் பற்றி எவர்க்கும் கவலை
இல்லவே யில்லை; இதுதான் உண்மை
இடையில் நலிபவன்; எம்மைப் போன்ற
ஒருசிலர் தானே; ஆகையி னாலே
இனியும் இத்தொழில் எமக்கே லாது
விதியிது வென்றே வேறு பணியைச்
செய்து பிழைப்பதே சிறந்த செயலாம்
உய்யும் வழிவே றுண்டேல் வீணாய்த்
தையை முறித்தேன் கஷ்டப் படுவான்
அதுமட்டு மன்று; ஆமிக் காரரும்
இந்த வூருக் கிடைக்கிடை வருகிறார்
எம்மைப் போன்ற இளைஞரை எல்லாம்
பயங்கர வாதிகள் என்ற பேர் சூட்டி
கைது செய்து கஷ்டப் படுத்துறார்
இதனைப் பற்றியும் எண்ணுதல் வேண்டும்
இவ்வாறு சம்பந்த னெடுத்துக் கூறத்
தருமனும் ஆழமாய்ச் சிந்திக்க லானான்.

சம்பந்தன் சொல்வதும் சரிதான் நன்றாய்
கஷ்டப் பட்டும் கடைசியில் நட்டம்
ஏற்படு மென்றால் இதயமே வேகும்
ஆற்றலை வேறு வழியில் திருப்பிப்
போற்றுதற் குரிய புதுவழி காண்போம்

விதிவழி செல்வோம் என்பதை விடுத்து
மதிவழி செல்வதே மாற்று மருந்தாம்
புதுத் தொழில் இலேயேல் பழந்தொழி லுண்டு
தரையிலே பிறந்து நீரிலே பிழைக்கும்
கரையோர மகன்யான் கவலையேன் மீண்டும்
கடல் மா தாவின் காலில் விழுவேன்
உடற்பல முண்டு உழைத்துப் பிழைப்பேன்
சமுத்திரா தேவி சரண மளிப்பாள்

## 21. மினிபஸ்

அடுத்தநாட் காலே அருமை நண்பன்
சம்பந்த னோடு தருமன் ஊர்க்குப்
பயணம் செய்யப் பஸ்ஸில் ஏறினன்
தனியார் வாகனம் சகல இடத்திலும்
அணியணி யாக அடுக்கி நின்றன
மினிபஸ் தனிலே மனிதர் பயணம்
செய்திடும் லட்சணம் செப்புதற் கரிது
இழங்கு மூட்டையைக் கீழும் மேலும்
அடுக்குதல் போல ஆட்களைப் போட்டு
ஏற்றி யிறக்குதல் இயல்பாய் நடக்கும்
இருவரும் இத்தகை வாகன மொன்றில்
ஏறி யமர்ந்தனர்; இடைவெளி யின்றிப்
பயணிகள் தம்மைப் பற்பல இடத்திலும்
ஏற்றிக் கொண்டனர் இருந்தவர் மடியிலும்
ஆட்களை யிருத்தினர்; ஆணோ பெண்ணோ
குழந்தையோ குட்டியோ கிழவனோ கிழவியோ
எவர்நின் ருலும் இல்லை யென்னுது
ஏறு ஏறெனும் இனிய நெஞ்சம்
கொண்டவன் இந்தக் கண்டக்டர் பையன்
பிழைக்கத் தெரிந்த பெரும்புத்தி சாலி
இடமில்லை எனினும் ஏறுங்கள் ஏறுங்கள்
அடுத்த தரிப்பில் ஆட்கள் இறங்குவர்
ஆசன முண்டு ஆசன முண்டு
ஐயா, அம்மா அக்கா அண்ணு

தம்பி தங்கை தயவாய் ஏறும்
உள்ளே தள்ளி ஒழுங்காய் நில்லும்
பொலிஸ்காரன் வாறன் பிடிப்பான் அடிப்பான்
கதவைச் சாத்தும் கழுத்தை தள்ளிக்
குனிந்து நில்லும்; குறைநினைக் காதீர்
சின்னப் பிள்ளைகட் கென்ன ஆசனம்
எழும்பும் பெரியவர்க் கிடத்தைக் கொடுங்கோ
அடுத்த தரிப்பில் இறங்குவோ ருண்டேல்
எழும்பி நில்லுங்கோ இருக்கட்டும் மற்றவர்
இப்படிச் சொல்லி ஏற்றி இறக்கும்
செப்படி வித்தை தெரிந்தவன் இவனே.
மேலாடை வீழ்ந்த நெடு என்று சொல்லமுன்
நாலாறு காதம் தேரை நடத்திய
நளமகராசன் தானே என்ற
எண்ணம் கொண்டவன் இந்தச் சாரதி
ஆதலி னுல் அவன் எண்ணப் படியே
பஸ்சும் வீதியில் பறக்க லானது
வருகிற போகிற வாகனம் பற்றி
ஒருவித கவலையு மற்றவனுகத்
தன்னெணப் படியே தான்தோன்றித் தனமாய்
அவனும் செலுத்த அதனுள் இருந்தோர்
எதிலே மோதி இடித்திடு வானே
ஏற்ற இறக்கத்தில் புரட்டிடு வானே
எம்மை யெல்லாம் கொன்றிடு வானே
இல்லையேல் ஊரில் சேர்த்திடுவானே
என்ற கவலையால் இறைவனைத் தொழுதனர்
இத்தகை இன்னல்கள் ஏற்பட்ட போதிலும்
சுவைபடும் சம்பவம் ஒருசில நடந்தன
காற்சட்டைக் காரர் கவுண்போட்ட பெண்கள்
தாவணி மாதர் தள்ளாக் கிழவர்
படித்த சிலபேர் படித்தவ ராக
நடிக்கும் சிலபேர் இப்படிப் பலபேர்
ஏறி யிதனுள் இருக்கும் பொழுது
காளையர் சிலபேர் கையால் இடிப்பர்
காலால் வருடிக் கதையும் கேட்பர்

கன்னியர் சிலபேர் கண்ணைச் சிமிட்டிக்
கைப்பைக்குள்ளே கடிதமெடுப்பர்
கிழவர் குடிக்கும் சுருட்டின் நாற்றம்
குழந்தைகள் வயிற்றைக் குமட்டச் செய்யும்
வாலிபர் வாயில் சிகரெற் புகையும்
வனிதையர் வாயில் விடுப்புத் தவழும்
கிழவிகள் வெற்றிலை புகையிலை சப்பி
வெளியிலே துப்பி வீதியில் செல்வோர்க்
கபிஷேகம் செய்வர்; அறிவிலா பேதையர்
இவற்றுக் கிடையில் இலங்கை வானொலி
இல்லாத தெல்லாம் எடுத்துச் சொல்லும்
நாடாப் பாட்டும் நடை மெலிந்தோர் போல்
பாடா வாரியாய் பாடிக் கிடக்கும்
இந்த நிலையில் இருவருமாக
அந்த பஸ்ஸில் அல்லற் பட்டுப்
பயணம் செய்து பலமைல் கடந்து
யாழ்நகர் எல்லையை அடைந்த பொழுது
பறையின் முழக்கமும் பட்டாசும்கேட்டன
எதிரே ஓர் பிரேதம் வருவது கண்டனர்
சாரதி பஸ்ஸைச் சற்றே நிறுத்தினன்.
எவரது பிரேதம் என்றனன் ஓர் ஆள்
கடந்த இரவு நடந்த கதையிது
இனந்தெரி யாத இரண்டு வாலிபர்
வடிவேலன் வீட்டு வாசலில் சென்றே
அழைத்து நின்றனர்; அவனும் வந்தான்
துப்பாக்கி ரவைகள் துளைத்துச் சென்று
வடிவேலன் உயிரை வானுல கோட்டின
அப்பாவி செத்தான், அவனது பிணம்தான்
இதுவென ஒருவன் எடுத்துரைத் திட்டான்
தருமனின் கண்கள் சற்றுப் பனித்தன.
சம்பந்தன் உதட்டில் புன்னகை பூத்தது
விதியிது வினைவைத் தடுத்திட லாமோ
அதிகாரம் பெற்ற ஆண்டவன் கூட
விதியினை மாற்ற விழைவதே யில்லை
அதுதான் நியதி அதுதான் உண்மை.

## 22. ஆசி நல்கினன்

சம்பந்தன் வீட்டை அடைந்தனர்-அங்கே
தங்கள் கதையை உரைத்தனர்-பின்னர்
அம்பல வாணர் அமைதியாய்-நல்ல
ஆறுதல் வார்த்தைகள் கூறினர்-அட
தம்பித ருமா நேரார் வேயிலே-நீயும்
தக்க வுயர் கல்வி கற்கவே-அங்கே
சம்மத மென்றுப தில் பெற்றேன் உடன்
தாயாரி டம் சென்று கூறுவாய்.

இத்தனை நாளும் அடைந்திட்ட துயர்
யாவும் பனித்துளி போலவே-உடன்
செத்து மடிந்திடும் பூமியில்-மிகச்
சீரும் சிறப்பும் அடைகுவாய் என்தன்
புத்திரன் போன்றவுன் வாழ்விலே-இன்பம்
பூத்துக் குலுங்கிட வேண்டுமாம் எனச்
சித்தம் மகிழ்ந்தவர் வாழ்த்தினர் தர்மன்
சிந்தை மகிழ்ந்துவீ டேகினன்.

காரிருள் எங்குமே சூழ்ந்தது இடி
காதைப் பிளந்தது மின்னலும்-கோடி
சூரியன் போற்பளிச் சிட்டது ஒரு
சூறைக்காற் றும்வீச லானது-பெரு
மாரிம ழையெனத் தக்கதாய் எங்கும்
மாபெரும் ஓசை எழுப்பியே-வானம்
பேரிரைச் சல் செய்ய லானது பயம்
பீடிக்கத் தர்மனும் ஓடினன்.

அன்னையைத் தூரத்தே கண்டதும் ஓடி
அப்படி யேகட்டிக் கொண்டனள்-அவன்
கன்னத்தில் முத்தங்க ளிட்டுமே இரு
கண்கள் கலங்கிடக் கூறுவான்-அட
என்னரும் செல்வமே ஏனடா – நீயும்
இன்றைக் கென இங்கே வந்தனை - உனைத்
தின்னத் திரிகிறார் காவலர் - அந்தச்
சேதி அறிந்திலை போலும் நீ

என்னம்மா சொல்கிருய் என்றுமே - அவன்
ஏக்கத்துடன் கேட்டு நின்றனன் - கற்பி
துன்பங்கள் உள்ளத்தை வாட்டிட - மிகச்
சோர்ந்த நிலையிலே கூறுவான் - அந்தக்
கன்னெஞ்ச ஞம் வடி வேலனை - நீதான்
காலனுக் கே யிரை யாக்கினை எனச்
சொன்ன படி படைக் காவலர் - இங்கே
சோதனை யிட்டுமே சென்றனர்

இந்தப் பிறப்பில் எப் பாவமும்-ஐயோ
யானும் அறிகிலேன் தெய்வமே-போன
அந்தப் பிறப்பின் வினையிதோ அன்றி
ஆண்டவன் கட்டளை தானிதோ எனை
வெந்து மடிந்திடச் செய்யுதே இவ்
விதியினை யாருக்குக் கூறுவேன்-அரும்
மைந்தனே ஓடி ஒழிந்திடு இன்றேல்
மாபெரும் துன்பம் அடைகுவாய்

கொட்டும் மழையெனக் கண்ணீரை - அந்தக்
கோதையும் சிந்தியே நின்றனள் - ஒரு
நட்ட சிலையெனத் தர்மனும் - அவன்
நாவசை யாதே யிருந்தனன் - கற்பி
கட்டி யணைத்த படியுமே - தம்பி
காலத்தை வீணுகச் செய்யாதே - கொடுந்
துட்டர்கள் வந்திடப் போகிருர் மிகத்
தூரதே சம்ஓடிப் போய்விடு

அப்பொழு தந்த இளை ஞனும் - மிக
ஆறுத லாகவே கூறுவான் - "ஒரு
தப்புத் தவறு செய் யாதயான் - தூய
சத்திய வாழ்வினை வாழ்ந்தயான் - யார்க்கும்
செப்பிடா தோடி மறைவனேல் - எனை
தியன் கொலைகாரன் என்குவர் - அதை
எப்படி அம்மா நீ தாங்குவாய் - இதை
எற்றிட யான்தயா ராவனே?

"ஆயிரம் துன்பங்கள் நேரினும்-பல
ஆக்கினை கள் வந்து சேரினும்-தீய
பேயினை யொத்தவர் கூடியே-பல
பீடைகள் செய்து நசுக்கினும்-தெரு
நாயினைப் போல நடத்தினும்-பொல்லா
நஞ்சினைத் தந்தெனை மாய்க்கினும்-பெற்ற
தாயே நான் ஓடி ஒளித்திடேன்-காக்கும்
சத்தியம் விட்டு மறைந்திடேன்"

"சத்தியம் செத்துமே போச்சடா - தம்பி
தருமம் அழிந்துமே போச்சடா - தூய
உத்தமர் வாழ்க்கையும் போச்சடா - இங்கே
உண்மையும் பொய்யாகப் போச்சடா தீய
பித்தர்கட் கே வழி யாச்சடா - அவர்
பேசுவ தேசரி யாச்சடா - எந்தன்
புத்திர னேசொல்லைக் கேளடா எங்கும்
போயெனும் தப்பிடப் பாரடா"

"கோழை நான் அல்லன் என் அன்னையே - எனைக்
கொன்றாலும் ஓடி ஒழித்திடேன் - இந்த
வேளையில் இப்படிச் செய்வனேல் - எனை
வீரமிலாக் கொலை காரனாய் - எந்த
நாளும் பழித்துரை செய்குவர் - இதை
நானும் பொறுத்துயிர் வாழ்வனோ - எனை
வாழவைத்த அன்புத் தெய்வமே - உண்மை
வாழும் அதை வெல்ல லாகுமா.?
சூரியனை இருள் கௌவுமோ - எஃகுத்
தூணைக் கறையான் அரிக்குமோ- பெய்யும்
மாரியைக் கையும் தடுக்குமோ - யானை
மத்தகத் தைப் புல் துளைக்குமோ - பெரும்
பாரிய மாமலை ஒன்றையே - எலி
பற்களால் கோதி அரிக்குமோ வாழும்
சீரிய சத்தியம் தன்னையே - வெறும்
தீயரின் பொய்ம்மை சிதைக்குமோ
உடலை அழிக்க முடியலாம் - வாழும்
உண்மையைக் கொல்ல முடியுமா - ஓ

புடலையில் பூசணி காய்க்குமா - பழனி
புத்திரன் ஓடி ஒழிப்பனோ - ஆழக்
கடலேதான் வற்றினும் வற்றலாம் - இந்தக்
காளையின் நெஞ்சுரம் வற்றுமா - கொடும்
படையே திரண்ட பொழுதிலும் - எந்தன்
பாதை வழியேதான் செல்லுவேன்.''

''வீம்பு நீ செய்தல் நியாயமா - உந்தன்
வீரத்தைக் காட்டுந் தருணமா - ஒரு
வேம்பில் இளநீரும் காய்க்குமா - பொல்லா
வேங்கையும் மானைச் சகிக்குமா - நாக
பாம்பும் தவளைக் கிரங்குமா - தேடும்
பாவியர் உன்னை விடுவரா - என்னை
தேம்பி யழச் செய்தல் நீதியா - எந்தன்
செல்வமே தாமத மேனடா?''

''அஞ்சியான் ஓடி ஒழிந்திடேன்-எங்கும்
யாருக்கும் கைகட்டி வாழ்ந்திடேன் பொல்லா
வஞ்சனை கண்டு பயந்திடேன் - தூய
வாழ்வினை விட்டு விலகிடேன் எனை
நெஞ்சில் வளர்த்த என்தெய்வமே - இனி
நேர்மைக்கே போரிடப் போகிறேன் -கண்கள்
துஞ்சிடேன்; நான்புதுப் பாதையில் - செல்லத்
தாயவளே ஆசி நல்குவாய்'

௭

இடி இடித்தது மின்னல் மின்னிற்று
எங்குமே யிருள் ஆழ்ந்தது
துடிதுடித் தனள் கற்பி; தர்மனின்
துணிவினைக்கண்டு மெச்சினள்
கொடிய ருக்கினி இடமளிப்பது
கொஞ்ச மும் தர்மம் அல்லவாம்

மடிய லாய் எந்தன் மைந்தன்; அன்னவன்
மரணத்தால் உண்மை வாழட்டும்.

காளி போல்அவள் சீறி நின்றனள்
காலனாய் அவள் மாறி விட்டனள்
கோழை யல்லன் என்மைந்தன்; உண்மையைக்
குவலயத்தினில் வாழச் செய்குவன்
ஏழைநாம் என்ற போ திலும்இனி
ராக்க தர்க் கெமன் ஆகு வோம்-பிறர்
வாழ வைப்பதே கடமையாம்; என்றும்
வாழுவோம் அன்றில் மாங்குவோம்.

வஞ்சகம் தனைக் கொல்லடா-இனி
வஞ்ச கர்க்கிலை வாழ்வு நாட்டிலே
அஞ்சு வோர்க் குடன் அபய மாகுவாய்
அற்பர்கட் கெம னாகி வீழ்த்துவாய்
நஞ்சை யொத்தவர் நல்ல மக்களை
நாச மாக்கிட நாம் சகிப்பதா?
துஞ்சிடோம் இனித் தொடருவோம் பணி
தூய அன்னையே வீர காளியே.

தர்ம தேவதை ஆட்சி செய்தனள்
தர்ம னும்புய லாகி நின்றனன்
துர்க்கைபோல் அவள் சினந்தெழுந் தனள்
தூய மைந்தனை உச்சி மோந்தனள்
கர்ம வீரனே பழனி மைந்தனே
கற்பியின் வயிற் றுதித்த செல்வமே
தர்மனே வெற்றி வாகை சூடுவாய்
தாயுரைத்தனள் உயிர் பிரிந்தனள்.

தரப்படுத்தலால் திசை திரும்பியோன்
தந்திரத்தினால் வாழ்விழந்தவன்
அரிய மேதையாய் வரவிருந்தவன்
ஆயினும் புதுப் பாதை செல்கிறான்

உரிய பாதையோ அல்லவோ என
உலகமே இதை நீ உரைத்திடு
பெரிய லட்சியம் கொண்ட அன்னையின்
பிரிவிலேபய ணந்தொ டங்கினன்.

கடகட கட; கட கடவென
கான மெங்கணும் இடியிடித்தது
பட பட பட பளிச் பளிச் பளிச்
பக்க மெங்கணும் மின்ன லுற்றது
சட சட சட; சட சட வெனச்
சந்து பொந்தெலாம் மழை பொழிந்தது
தட தட தட; தகிட தகிட தீம்
தாண்டவம் பஞ்ச பூத மாடின.

ஈழத்தின்
முன்னணிக் கவிஞர்களில்
ஒருவரான
காரை. செ. சுந்தரம்பிள்ளை

இன்றைய ஈழத்து இளைஞன்
ஒருவனின் அவலநிலையை
'பாதை மாறியபோது'
என்ற தலைப்பில்

அருமையான கவிதைகளால்
அற்புதமான ஓவியமாக
தீட்டியுள்ளார்.

இது ஒரு
வரதர் வெளியீடு